டத்தின்

# திறவுகோல்




PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY

657-P

340

140

## சட்டத்தின் திறவு கோலை அணிசெய்யும் ஆக்கங்கள்

[redacted]


எமது பார்வையில்

தமிழீழத் தேசிய தலைவரின் உரையிலிருந்து

சீதனம் ஒரு சமுகச் சிறுமை 01

முகாமையில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் 04

முகவரிகள் தொலைந்துவிட்ட எவன்சட்டம் இனி எமக்கெதற்கு 09

குடும்ப ஆலோசனைச் சபை 11

கோரக்காட்சி 13

தமிழீழ நீதிமன்றில் குற்றவியல் வழக்கு.... 16

நீருக்கு வாய்க்கால் நிலத்துக்கு வரப்பு 18

குற்றத்தண்டனை அன்றும் இன்றும் 20

நீதி செலுத்துகையில் முதன்மை வகிக்கும் நடுவு நிலைமை 24

விடயம் 26

புலி இங்கெழுதும் சட்டம்தான் இனி 30

முறைமை பிறழாத நீதி 31

பல்மே சட்டத்தின் திறவுகோல் 34

வேட்டைக் கத்தி... 36



-4-10-1995



1. ஆக்கம்:- ஆசிரியர் குழு

2. இதழமைப்பு:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

3. அட்டைப்படக்கருத்து:- ந. மதிவர்மன்

4. ஓவியம்:- தயா

5. ஒற்றுரு:- ஆனந்தன்

6. அச்சு/அட்டை ஆக்கம்: அந்திவானம் பதிப்பகம் நாவலர் சாலை யாழ்ப்பாணம்.

7. விலை - 20 /-

தொடர்புகளுக்கு -

**சட்டத்தின் திறவுகோல், நடுவப்பணியகம் நீதிநிர்வாகத்துறை பொற்பதி வீதி, கோண்டாவில்.**

# சட்டத்தின் திறவுகோல்

இதழ் — 02
செப்டம்பர்,
ஒக்டோபர்,
நவம்பர்
1995

## எமது பார்வையில்...

மக்கள் சமுதாயத்தினை வழிப்படுத்துவதில் சட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் முதன்மையான பங்கு வகிக்கின்றன. அவை நாட்டுக்கு நாடு வேறுபட்ட முறைகளினால் உருவாக்கப்பட்டாலும் அவற்றின் நோக்கம் ஒன்றாகவே இருக்கின்றது. அந்த வகையில் தமிழீழத்திற்கான பல சட்டங்களும் தமிழீழத் தேசியத் தலைவரின் ஒப்புதலின் அடிப்படையில் ஆக்கப்படுவது நிதர்சனமான ஒன்று அவ்வாறு ஆக்கப்படும் பல்வேறுபட்ட சட்டங்களும் தமிழீழத்தின் நிகழ்கால மக்கள் வாழ்வுடன் ஒன்றியதாய் அவர்களின் தேவைகள், குறைகள் என்பவற்றுடன் தொடர்புபட்டு அமைந்துள்ளன.

இன்று தமிழீழத்தில் நடைபெறுகின்ற விடுதலைப் போரில் சமூக விடுதலையும் பிரதானமான இடத்தை வகிக்கின்றது. அவ்வாறான சமூக விடுதலையைப் பெறுவதில் சட்டங்களும் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றன என்பது வரலாற்று உண்மையாதலால் அதன் வழியே தமிழீழத்திலும் பெரும் சமூகத் தளைகளுள் ஒன்றியுள்ள சீதன முறையைத் தடை செய்யும் பொருட்டு ''மணக்கொடைத் தடைச் சட்டம்'' எனும் தூய தமிழ்ப் பெயரில் ''சீதனத் தடைச் சட்டம்'' தமிழீழத் தேசியத் தலைவரின் ஒப்புதலின் அடிப்படையில் வெளிவந்துள்ளது.

இச்சட்டம் சீதனத்தினைத் தடை செய்வதுடன், நன்கொடையாகச் சொத்துக்களைப் பரிமாறுவதற்கான ஏற்பாடுகளையும், சீதன உறுதிகள் வரைவதைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளையும், தொழில் அடிப்படையில் செயற்படுகின்ற திருமணத் தரகர்களைத் தடை செய்வதற்கான ஏற்பாடுகளையும் தன்னகத்தே அடக்கியதாக அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

இந்த வகையினில் தமிழீழத்தில் தற்காலத்தில் முதன்மை வகிக்கும் சட்டமாகவே இச் சட்டம் அமைந்துள்ளது. இச் சட்டத்தின் எதிர்பார்ப்புக்களும், இதனால் மக்கள் அடையவுள்ள நன்மைகளும், மக்கள் இச் சட்டத்துடன் ஒத்திசைந்து செயற்படுவதனால் மேலும் மேன்மை அடையும் என்பதில் ஐயமில்லை.

# சமூக நீதிக்கு முதன்மை கொடுக்க வேண்டும்



தமிழீழத் தேசியத் தலைவர்
**திரு. வே. பிரபாகரன்**

*எமது தேசிய இனத்தின் பண்பாட்டிற்கு அமையவும் மாறிவரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்டமுறை உருவாக்கப்பட வேண்டும். எமது தேசத்தை அடிமைப் படுத்திய அந்நியர்கள், எமது மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தைக் கொண்டு வர முயன்றார்கள். அவர்கள் கையில் பலம் இருந்ததாலும் நாம் அடிமையாக வாழ்ந்ததாலும் அவர்கள் தமது சட்டங்களையும் எம்மீது திணித்த வேளைகளில் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.*

*இப்பொழுது நாம் எமது சொந்தப் பலத்தின் மூலம் எமது மண்ணை மீட்டு வருகின்றோம். ஆகையால் எமது தேசத்தில் எமக்கேற்ற சட்ட நிர்வாக ஒழுங்கை கட்டியமைத்து வருகின்ற வேளையில், தமிழீழ நீதி நிர்வாகத்துறை திறம்படச் செயற்பட்டு வருவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனினும் நீதி நிர்வாகத் துறை மேலும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். போராளிகளாகிய நீங்கள் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் அடிமைப்படாது, சமூக நீதிக்கு முதன்மை கொடுக்க வேண்டும்.*

*எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள், அநீதிகள் தொடர்ந்து ஆணாதிக்கக் கொடுமைகள் வளர்கின்றன. இந்தச் சமூக அநீதிகளிலிருந்து பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படுவதோடு, சீதனம் போன்ற பாதிப்பை ஏற்படுத்துகின்ற முறைகளும் சட்டத்தினால் நீக்கப்படல் வேண்டும்.*

[ 20. 05. 1995 அன்று தமிழீழ நீதிமன்றுகளின், நீதியாளர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதியாளர்கள், சட்டவாளர்கள் உறுதிப்பிரமாண நிகழ்வின்போது தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து...... ]



தமிழீழ நீதிமன்றுகளின் நீதியாளர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதியாளர்கள், சட்டவாளர்கள் உறுதிப் பிரமாண நிகழ்வு, 20.05.1995 அன்று தமிழீழத் தேசியத் தலைவர் **திரு. வே. பிரபாகரன் அவர்கள்** முன்னிலையில் நடைபெற்றபோது, நீதி நிர்வாகத்துறையின் வெளியீடான 'சட்டத்தின் திறவுகோல்' ( **காலாண்டு இதழ்** ) வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்விதழின் முதல் பிரதியை, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. இ. பரா அவர்களிடம் பெற்றுக்கொள்வதை இப்படத்தில் காணலாம்.

# சீதனம் ஒரு சமூகச் சிறுமை

தமிழீழச் சட்டம் தனது பங்களிப்பை முனைப்புடன் செய்ய முன்வர வேண்டும். புற்றுநோய் போன்ற இக் கொடிய நோயைத் தீர்க்க இளம் வயதினரிடையே அதாவது அவர்களது கல்வி பயிலும் போதனா நிலையங்கள் அனைத்திலும், இக்கொடுமையைத் தாங்க முடியாது தன்னையே அழிக்கும் கன்னியரைக் கருத்தில் கொண்டு, இதன் அநாகரிகம், தாக்கம், இது எவ்வாறு மானிடத்தை வஞ்சிக்கிறது என்பன போன்ற உண்மை வரலாறுகள் போதிக்கப்படுதல் வேண்டும்.

உலகில் உயிரினம் தோற்றம் பெற்ற காலம் முதல் அதன் பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமாக ''சேமிப்பு'' என்னும் பழக்கம் இயற்கையாக இயற்கை அன்னையால் உயிரினங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு வழக்கமாகும். இதனை நாம் உயிரினத் தோற்றுவாயின் முதல் படியிலுள்ள மரங்கள் தொட்டு ஏனைய ஊர்வன வரையான உயிரினங்களிடம் ஆங்காங்கே காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக; ஒரு மரத்தினை எடுத்துக்கொண்டால் அது மாரிகாலத்தில் தனக்குத் தேவையான நீரை தன்னகத்தே சேமித்து வைத்து கோடையில் பயன்படுத்துகின்றது. இதே போன்று எறும்பு தொடக்கம் பல்வேறு விலங்கினங்கள் தமது நாளைய தேவைக்கான சேமிப்பைத் தம்மகத்தே கொண்டு சேமித்து வைக்கும் பழக்கத்தினை அவையிடையே காணக்கூடியதாக இருக்கிறது. இது அன்றாட வாழ்க்கையில் சகல உயிரினத்திலும் இயற்கையான வழக்கமாகி இருந்து வருவதை நாம் கூர்ந்து நோக்கினால் கண்டு கொள்ளலாம். (உதாரணமாக: எறும்பு, எலிவர்க்கம் போன்றவை). இச் சேமிப்புப் பழக்கமானது, மனித இனத்தைப் பொறுத்தவரையில் தனது எதிர்கால ''வாரிசுக்கான சேமிப்பு'' ஆக தோற்றம் பெற்றது. ஆனால் இந்நடைமுறை காலப்போக்கில் புறச்சூழல்களினாலும் அந்நிய நாகரிக ஊடுருவலாலும், போலிக் கௌரவமும், சனப்பெருக்கமும் பெரும் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமை இங்கே நோக்கற்பாலது.

ஆரம்பத்தில் மனிதன் நாடோடியாக மரநிழலிலும், குகையிலும் வாழ்ந்த போது 'சேமிப்பு' அவனை பெரியளவில் கவரவில்லை. மனித வாழ்க்கையானது நாடோடி வாழ்க்கையிலிருந்தும் மாற்றம் பெற்று ஓரிடத்தில் நிலைத்து கூட்டு வாழ்வாகப் பரிணாமம் பெற்ற பின்பே 'சேமிப்பு' மனிதனுடன் குடிபுகுந்தது. படிப்படியாகக் குடும்ப வாழ்க்கையாகி, கிராம வாழ்வை நோக்கி நகர்ந்து, நகர வாழ்வைக் கண்டு, மாநகர வாழ்வுக்கு காலடி வைத்து பரந்து உலகளாவிய வாழ்வாக மாற்றம் பெற்று வரும்முறை வளர்ச்சியின்போது இச் சேமிப்புத் திட்டம், 'சீதனம்' என்னும் பெயர் மாற்றம் பெற்று மானிடத்தை சீண்டத்தொடங்கியது.

இம்முறையானது ஆரம்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகள் எதிர்காலத்தில் பசி பட்டினியின்றி சீரும் சிறப்புமாகத் துன்பமின்றி வாழ வேண்டும் என்ற நன்னோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகி, காலப்போக்கில் தனிக்குடும்பமாக வாழப்போகும் புதுமணத்தம்பதியர்க்கு தமது சேமிப்பில்

ஒரு பகுதியை வழங்கி அவர்களின் புது வாழ்வில் மகிழ்ச்சி கண்டனர். இவ்வேளை புதுமனத்தம்பதியினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவோ இருந்து வந்தனர். இவ்வாழ்க்கை முறையில் அவர்கள், இன்பமான வாழ்வையே கண்டனர். இம்முறையான வளர்ச்சி காலப்போக்கில் அந்நிய ஊடுருவல்கள், அந்நிய நாகரீகங்கள், போலிக் கௌரவங்கள் ஊடுருவியதன் பயனாக ''வாரிசு சேமிப்புத் திட்டம்'' தவிடு பொடியாகி மதிப்பற்று மருவி 'சீதனம்' என்னும் (அநாகரீக), பெயர் மாற்றம் பெற்றது. இத்திட்டமானது, பெண்களை மையமாக வைத்து தனது கோரப் பற்களை நீட்ட ஆரம்பித்தது. இக்கொடூரத்திற்கு பாவையரே முற்றுமுழுதாக பலியாகின்றனர். இது சமூகத்திற்கு நீங்காத ஒரு சிறுமையை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றார்க்கு நீங்காச்சுமையாக ஏறி அமுக்குகின்றது. வாரிசுச் சேமிப்புப் பரிமாற்றம் இருந்த காலம் சொந்த மாமன் வீட்டிலேயே மணச்சோடி பரிமாற்றம் பெற்றது. ஆனால் இன்று கூடிய சீதனத்திற்காக அயலூரில் மணச்சோடி தேடும் காலம் புகுந்து எல்லோர் மனத்திலும் கயிறுமாட்டி கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்றது. இது ஒரு முகமாக ஒருசாராரின் குறைபாடன்று. அன்று சொந்த மாமன் மகனுக்குக் கழுத்து நீட்டிய மணப் பெண்களும் அவர்தம் பெற்றார்களும் 'சீதனத்திற்கு இவரா? அதுவும் இந்த ஏழை விவசாயியா' என்ற கேள்வியைத் தம்முன் வைத்தனர். ''கோமணாண்டி வேண்டாம், கோழி மேய்ப்பவனாயிருந்தாலும் கோறண மேந்திலை மேய்ப்பவனாகவே இருக்க வேண்டும்'' என்று அடம்பிடிக்கும் முறைக்குச் சமுதாயம் மாறியதன் காரணத்தால் எஞ்சினியர், டாக்டர், உபாத்தியாயர், கிளாக்கர் என்ற மனப்பாங்கு இக்கொடுமைக்கு நீரூற்றி வளர்த்தது, வளர்த்துக்கொண்டே வருகின்றது. இதனால் பெண் பிள்ளைகளின் பெற்றார் முதுகில் சுமை ஏறிய முக்க பெற்றார் ''சேற்றில் புதைந்த பாரவண்டியை முழி பிதுங்க முக்கி முக்கி இழுக்கும் எருதுகளைப் போன்று'' குடும்பப் பாரத்தை இழுக்க மாட்டாது தேம்பித் தவிக்கின்ற பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிராமத்து இளம் காளை ஒருவன், வீறுமிக்க காளையை போட்டியில் அடக்கித் தனது ஆண்மையின் பெருமையைக் காட்டும் போது, அவ்வீரனுக்கு மாலையிட்டாள் அன்றைய நங்கை. இன்றைய நங்கையோ அந்தோ பரிதாபம்! இல்லத்திலே தன் வருங்கால மைத்துனிக்கு மணாளன் பாவனை கொடுத்து, மாலையிட்டு, உற்றார் உறவினர் புடைசூழ, வீடியோ படம் எடுத்து, ஊர் சுற்றி வந்த பின் தாலியுடன் தன்னந்தனியாளாக இளாலிப் பாதை தாண்டி, முன் பின் தெரியாத மணாளனைத் தேடி சுவிசுக்கும், பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் தனிப்பயணம் மேற்கொள்ளும் பரிதாப நிலை. இங்கு சீதனக் கொடுமை லக்ஷனாவை மட்டும் வஞ்சிக்கவில்லை பக்கத்துவீட்டுப் பாமாவையும் அல்லவா சீண்டிவிட்டு நிற்கின்றது. ''பக்கத்து வீட்டு லக்ஷனா லண்டனுக்குப் போகின்றா திருமணத்திற்கு; எம்மகள் பாமா என்ன அழகில்லையா, சங்கையில்லையா? தராதரம் இல்லையா? கனடா செல்வதற்கு'' என்று விசும்பு பேசி, இருக்கும் நிலம்புலங்களை விற்று, அயல்நாட்டுக்கு அனுப்பி விட்டு வாழ்க்கை பூராவும் கண்ணீர்கதை பேசும் பெற்றார். மறுபுறம், சீதனக்கொடுமையின் உச்ச நிலைப்பாடாக கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே நாளில் ஒரே வேளையில் மூன்று அப்பாவிகள் ''இறப்புத் தான் எமக்கு விடுதலை அளிக்கும் ஒன்று'' எனக் கருதி, தம் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்ட பரிதாபக் காட்சி ஒன்று பஞ்ச சிலர் கண்ட பாரத பூமியில் நடைபெற்றுள்ளது. (ஆதாரம்: சண்டேரைம்ஸ் மார்ச், 1995) இவற்றிற்கெல்லாம் மூல காரணம் மஞ்சள்நூலில் போட்ட மூன்று முடிச்சு பத்துக்கு மேற்பட்ட மாற்றுத் தங்கத்தில், தங்க வடத்திற்குத்தான் எம் கழுத்து நீட்டப்படும் என்ற போலிக் கௌரவம். இப்போலிக் கௌரவத்தின் உச்சக் கட்டமாக கடந்த மாதம் பாரிஸ் நகரில் ஈழத்தமிழர் ஒருவரின் சாதனை ஒன்று - ''87 கிலோ எடை கொண்ட மாப்பிள்ளை ஒருவர் தனது எடைக்குச் சமமான 87 பவுண் எடையில் தாலி கட்டிய நிகழ்ச்சி.'' (ஆதாரம்:

உதயன் 14.06.1995) இவ்வகையான போலிக் கௌரவத்தின் பலாபலன் - தங்க வடத்திற்கும் பெண் வீட்டாரின் கையை எதிர்பார்க்கும் மாப்பிள்ளை வீட்டாரின் பரிதாப நிலை. இது மட்டுமல்ல மாப்பிள்ளையின் பெற்றாரின் பின் வாழ்க்கைக்கு வாழ்க்கைப்படி. அத்துடன் மாப்பிள்ளையின் சகோதரிக்கு நன்கொடை.

இவற்றிற்கெல்லாம் சிகரம் கட்டினால் போன்று, தற்போது நடைமுறையில் இருக்கும் கல்வி முறையானது, மேலும் சிறுமைத் தன்மை போன்று பின்வரும் குறுகிய வட்டத்தில் சுழற்சி பெறும் ஒன்றாக உள்ளது. இம் முறைமை பூரணமாக ஒழிக்கப்பட்டு சிறந்த தொழிற் கல்வி முறை புகட்டப் படல் வேண்டும்.

தற்போதைய நடைமுறை ஏடு பின்வருமாறு அமைகின்றது:-

உயர்படிப்பு = வசதியான உத்தியோகம்
இலட்சம் சீதனம்.
குடும்ப வாழ்க்கை ஆரம்பம்.
மீண்டும் அதே தொடர் பல்லவி.

இச்சேரழிவின் பிடியில் இருந்து மானிடம் பிழைக்க வேண்டும். இக் கோரப் பிடியில் இருந்தும் தப்பிப் பிழைப்பதற்காக உலகளாவிய ரீதியில் ஆங்காங்கே அவ்வப்போது படு பயங்கரமான தற்கொலைநிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றமையை மேலே கண்டு கொண்டோம். அதே வேளை இதற்கு எதிரான சோக நிகழ்வுகளும் இடம்பெற்று வரத் தவறவில்லை. உதாரணம்: இந்தியாவில் ''சீதனம் கேட்கும் மாப்பிள்ளை வீட்டாரின் அக்கிரமக்காட்சிக்கு சவுக்கடி கொடுத்தாள் ஒரு வீர மங்கை''. அதாவது, பேச்சு முற்றுப்பெற்று திருமணம் நிகழ உள்ள சில தினங்களுக்கு முன் மீண்டும் சீதனம் கூடுதலாகக் கோரிய மாப்பிள்ளை வீட்டாருக்கு, திருமணத்தினத்தன்று திருமணம் நடைபெறவுள்ள திருமணப்பந்தலின் முன்

''சீதனக் கொடுமையால திருமணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. சிரமத்திற்கு மன்னிக்கவும்'' என்னும் விளம்பரம் இட்டு திருமணத்தைத் தடுத்தாள் அந் நங்கை.

இச் சிறுமைக்கு எதிராக இது மட்டுமல்ல இன்னும் மானிடம் மேலும் தீவிரமாக, தீவிரமான செயற்பாடுகளைச் செயற்படுத்த வேண்டும்.

முக்கியமாக ''சீதனம் கோரும் ஆடவனை திருமணம் செய்வதில்லை'' என்று திட சங்கற்பம்கொண்டுஎழுதல் வேண்டும். தன் சொந்தச் சேமிப்பில் தாலி கட்ட இயலாத மணாளனைப் புறந்தள்ள வேண்டும்.

சட்ட மூலம் சீதனம் கொடுப்போரும் வாங்குவோரும், மாப்பிள்ளைச் சந்தையை கிராக்கி கொண்டதாக மாற்றுவதற்கு முன்னோடியாகச் செயற்பட்டு வரும் இடைத் தரகர்களும் ஒருநிலைப்படுத்தப்பட்ட தண்டனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும். திருமணம் செய்து புதுப் பொலிவுடன்வாழ எத்தனிக்கும் மணப்பெண்ணை மரணவாயிலுக்கு இட்டுச் செல்லும் மரண தூதனாகச் செயல்படும் இச் சிறுமை, சமுதாயத்தில் மூல வேருடன் அறுத்து எறியப்படல் வேண்டும்.

சட்டத்தால் ''குடும்ப சேமிப்பின் வழங்கல்'' எல்லை நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

இவையாவற்றுக்கும் மேலாக திருமணம் செய்யப் போகும் ஆணும் பெண்ணும் அந்தஸ்து, போலிக் கௌரவம் வேண்டாத ஆடம்பரங்களில் தம்மை உட்படுத்தாது அமைதியான சிக்கன வாழ்வை அமைக்க வள்ளுவன் காட்டிய நல்லற வாழ்க்கையை ஏற்று, அதன்வழி நடக்க முன்வர வேண்டும். அப்போது இதுவரை எம்மீது ஏறி ''கழுதை முதுகில் ஏற்றப்பட்ட சுமை போன்று'' மானிடத்தை வருத்திவரும் இச்சமூகச் சுமை விடை பெறுவது திண்ணம். இதேவேளை எதிர்காலப் புது மணத் தம்பதியரின் தாரக மந்திரமாக;

''வள்ளுவன் கண்ட நல்லற வாழ்வினை
சீதனமில்லாப் புதுமணம் கொண்டு
சீரிய உலகினை
சிறப்புடன் அமைப்போம்.''

என அமைதல் வேண்டும்.

ஏழாலையூர் இ. பரமகுரு

# முகாமையில் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம்

# THE IMPORTANCE OF LEDERSHIP IN MANAGEMENT

## 1.0 அறிமுகம்

தனி மனிதன் அல்லது நிறுவனம் யாவற்றிற்கும் ஓர் இலக்கு உண்டு. இந்த இலக்கை இலகுவாகவும் விரைவாகவும் அடைய வேண்டி இருக்கிறது. ஆனால் கிடைக்கின்ற மனித வளம் நிதி, இயந்திர உபகரணங்கள், நேரம் போன்ற வளங்கள் வரையறையுள்ளதாகக் காணப்படுகின்றது. ஆகவே வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்கான தந்திரோபாயங்களை உள்ளடக்கியதாக (Management) முகாமை காணப்படுகிறது.

## 2.0 தலைமைத்துவம் ( LEDERSHIP )

நிர்ணயிக்கப்பட்ட இலக்கை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்காக கிடைக்கின்ற மனித சக்தியினை திட்டமிட்டு வழி நடாத்திச் செல்கின்ற பண்புகளை உள்ளடக்கிய கருமத்தினை தலைமைத்துவம் எனவும், இத் தலைமைத்துவப் பண்புகளை உள்ளடக்கியதாக தலைமைத்துவப்பணியை மேற்கொள்பவர்களை தலைவர் எனவும் அழைப்பர். உதாரணமாக, இதற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முகாமையாளரை, ஒரு வகுப்பறைக்கு ஆசிரியரை, பாடசாலைக்கு அதிபரைக் குறிப்பிடலாம்.

குறிப்பிட்ட துறையில் தலைமை வகிப்பவருக்கு வலு இருத்தல் வேண்டும். இவ் வலுவினை ஒருவர் தலைமை வகிக்கின்ற துறையில் அறிவினை வளர்த்துக் கொள்வதன் மூலமும், இலக்கை நோக்கி வழி நடாத்தும் போது பாராட்டுகின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் இருப்பதன் மூலம், குறிப்பிட்ட பதவிக்கான நியமனத்தைப் பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தலைமை வகிப்பவருக்கு வலு இல்லாத சந்தர்ப்பத்தில் பொறுப்பை நிறைவேற்ற முடியாமல் இன்னொருவரிடம் ஒப்படைக்க நேரிடும். இதனால் முறையற்ற குழுக்கள் ஏற்படவும், அவர்கள் அதிகாரத்துஷ்பிரயோகம் ஏற்படவும் சந்தர்ப்பம் உண்டு. மேலும் இவ்வலு இல்லாத சந்தர்ப்பத்தில் பொறுப்பை நிறைவேற்ற ஏனையோர் ஏற்றுக்கொள்ளாத அல்லது ஒத்துழைப்பு வழங்காத நிலைமை ஏற்படலாம்.

தலைமைத்துவத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக கீழ்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. தலைமை வகிப்பவரின் பண்புகள்

02. ஈடுபடும் முயற்சியின் தன்மை

03. வழிநடாத்தப்படுபவரின் நிலை

04. சூழல் காரணிகள்

## 3.0 தலைமை வகிப்பவரின் பண்புகள்

தலைமை வகிப்பவர் நிறுவனத்தின் நோக்கத்தினை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்குக் கீழ்வரும் பண்புகளை உள்ளடக்கியவராக இவரது செயற்பாடுகள் அமைந்து இருக்க வேண்டும்.

01. **விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளல் :**

தலைமை வகிப்பவர் தனது துறை சார்ந்த விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். சரியான விமர்சனங்களை ஏற்று அதற்கு ஏற்ப தமது பகுதியைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் இலக்கை நோக்கிச் செயற்பாடுகளை இயைபாக்கிக்கொள்ள முடியும்.

02 **ஈடுபடும் துறையில் அறிவை வளர்த்துக்கொள்ளல் :**

தலைமை வகிப்பவர் தான் வழிநடாத்துகின்ற துறைசார்ந்த அறிவினை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது தான் காலத்திற்கு ஏற்ப வழிநடாத்தக் கூடியதாக இருக்கும்.

03. **நடு நிலைமைக் கொள்கை கடைப்பிடிப்பு :**

பல்வேறு துறைசார்ந்த பணியாளர்களை வழிநடாத்தும் போது சகல பணியாளர்களையும் சமமாக நடாத்த வேண்டும். நிறுவன விதி யாவருக்கும் பொதுவானதாக அமைந்து இருத்தல் வேண்டும். பாரபட்சம் காட்டுதல் ஆகாது. நடுநிலைமையுடன் நிறுவன விதி நடைமுறைப்படுத்தாவிடின் பணியாளர்களின் ஒத்துழைப்பை பெறமுடியாமல் இருக்கும். நட்பு, பகை, உறவு அறிந்தவர் என்ற வேறுபாடு காட்டாமல் யாவருக்கும் பணியாளர் என்ற நிலைமையில் வழிநடாத்த வேண்டும்

04. **நிறுவனத்தின் வளங்களைத் தக்க முறையில் பயன்படுத்தல் :**

பணியாளர், நிதி, ஏனைய நிறுவனச் சொத்துக்கள், நேரம் போன்ற வளங்களை நிறுவன இலக்கை அடைவதற்காகப் பயன்படுத்த வேண்டும். திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் மூலம் இவற்றின் துஷ்பிரயோகங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நிறுவன வளங்களை சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தக் கூடாது. இல்லையேல் ஏனையோர் பயன்படுத்துவதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும்.

05. **நிறுவன விதிகளை நடைமுறைப் படுத்துவதில் முன்மாதிரியாக இருத்தல் :**

நிறுவனத்தின் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக, ஆராய்ந்து வகுக்கப்பட்டதாக நிறுவன விதிகள் அமைந்து இருக்கின்றது. இவ்விதிகளை நடைமுறைப் படுத்தும் போது தலைமை வகிப்பவர் முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும். உதாரணமாக; ஆசிரியர்கள் 7.50 க்கு வர வேண்டும் என விதி வகுக்கப்பட்ட நிறுவனத்தில் அதிபர் 8.00 மணிக்கு வருவாராயின், ஆசிரியர்களை இவ்விதி பின்பற்ற வலியுறுத்த முடியாமல் அமைந்து விடும்.

06. **விளைவுகளை ஏற்றுக் கொள்ளல்·**

தலைமை வகித்துச் செயற்படும் போது சாதகமான விளைவுதான் தொடர்ந்து கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் பாதகமான விளைவுகளும் ஏற்படலாம். ஆகவே நிறுவனத்தினை வழி நடாத்தும் போது கிடைக்கின்ற நன்மைகள், தீமைகள் யாவற்றையும், தலைமை வகிப்பவரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். உதாரணமாக; பாடசாலை அதிபர் ஒருவர் நல்ல பரீட்சை முடிவுகள் கிடைக்கும்போது அதன் நன்

மைகளையும், பரீட்சை முடிவுகள் பாதகமாக வரும்போது பாதக நிலைமை ஏற்படின் அவ்விளைவுகளை ஆசிரியர் மீது சுமத்தலாகாது.

07. தீர்மானம் எடுக்கும் ஆற்றல் :

நிறுவனத்தின் சந்தர்ப்பம் சூழ்நிலைக்கேற்ப திறமான தீர்மானம் எடுக்கின்ற ஆற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட விதிக்கமைய தீர்மானங்கள் எடுக்கவேண்டும். அதிகாரம் இல்லாத சூழ்நிலைகள் ஏற்படும்போது அத்தீர்மானம் எடுக்கின்ற பொறுப்பை மேல் உள்ள பொறுப்பானவரிடம் அவ்விடயத்தை ஒப்படைக்க வேண்டும்.

08. மனித நடத்தையைப் புரிந்து கொள்ளல் :

வழிநடாத்துபவர் மனித நடத்தையைப் புரிந்து கொள்பவராகவும், அதற்கு ஏற்ப பணியாளர்களை வழிநடாத்தும் போதுதான் பணியாளர்கள் தாமாக முன்வந்து முழு வினைத்திறனையும் வெளியிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுவதுடன் ஒத்துழைப்பையும் வழங்குவர்.

09. அன்பு காட்டுதல் :

பணியாளர்களை இலக்கை அடைவதற்கு ஏற்ப வழிநடாத்தும்போது அவர்கள் மீது அன்பு காட்டுதல் வேண்டும். அதிகார ரீதியாக அன்றி, அன்பாக வழிநடாத்தும் போதே பணியாளர்கள் தூண்டப்படுவர். அப்போதுதான் அவர்களது வினைத்திறன் தானாக வெளியிடுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதிகார ரீதியாகப் பணிகளைத்திணிக்கும் போது மேற்பார்வை செய்யும் போது மட்டும் அவ் வேலை செய்வது போல பாசாங்கு செய்கின்ற நிலை காணப்படும். ஆகவே அன்பு காட்டுதல் பணியாளருக்கு ஓர் உந்து விசையாகக் காணப்படுகிறது.

10. நோக்கத்தை அடைவதற்காகப் பாடுபடல் :

தலைமை வகிப்பவருடைய எண்ணம், சொல், செயல் யாவும் இலக்கை அடைவதற்குரியதாக அமைதல் வேண்டும். அப்போதுதான் ஏனையோரையும் இலக்கை அடையப் பாடுபடக்கூடிய சூழ்நிலையினை ஏற்படுத்தும். நோக்கத்துக்கு மாறான எந்த நடத்தைக்கும் இடமளித்தல் ஆகாது

11. அன்பளிப்புக்கள் பெறக்கூடாது:

தலைமை வகிப்பவர் தனது பொறுப்பில் பணியாற்றும் பணியாளர்களிடம் அன்பளிப்புகள் அல்லது சலுகைகள் ஏதும் பெறக்கூடாது. அப்போதுதான் எல்லாப் பணியாளர்களையும் சமனாக வழிநடாத்தக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்தும். அன்பளிப்புப் பெற்றால் அன்பளிப்பு வழங்கியவர் நிறுவன விதிகளை மீறுகின்ற சந்தர்ப்பத்தில் கட்டுப்படுத்த முடியாத சூழல் ஏற்படலாம். ஏனெனில் பெற்ற சலுகைகள் ஏனைய பணியாளரும் தெரிகின்ற சூழ்நிலை ஏற்படும் என்ற எண்ணமே காரணமாகும்.

12. பணியாளரின் பலம், பலவீனம் அறிந்து வழிநடத்துதல் :

ஒரு நிறுவனத்தின் பணிபுரிகின்ற பணியாளர்கள் யாவரும் ஒரே மாதிரியாக இருப்பார்களென வழிநடாத்துபவர்கள் எதிர்பார்க்க முடியாது. அவர்களது பலம் பலவீனங்களை அறிந்து வழிநடாத்துதல் வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு பணியாளரும் நல்ல மனோ நிலையில் வினைத்திறனை வெளியிடுவர்.

13. தவறுகள் தனிமையிலும் திறமைகள் பலர் முன்னிலையிலும் தெரிவித்தல் :

தலைமை வகிப்பவர், பணியாளர்கள் தவறு செய்யும் சந்தர்ப்பத்தில் அதனைத் தனிமையில் தெரிவித்தல் வேண்டும். அப்போதுதான் அவர்கள் திருந்திச் செல்ல சந்தர்ப்பம் உண்டு. இவ்வாறு அன்றி பலருக்கு முன் தெரிவிக்கும் சந்தர்ப்பம் அல்லது அதிகார ரீதியாக கட்டுப்படுத்தும் சந்தர்ப்பத்தில் தற்காலிகமாகவே திருந்துகின்ற சந்தர்ப்பம் உண்டு.

திறமையாக ஒப்படைத்த பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பலருக்குமுன் பாராட்டப்பட வேண்டும். அப்போதுதான் ஏனைய பணியாளர்கள் தாமும் பாராட்டப்பட வேண்டும் என பொறுப்புக்களைத் திறமையாக நிறைவேற்ற முனைவர்.

14. சுதந்திரமாகப் பொறுப்பை நிறைவேற்ற இடமளித்தல் :

நிறுவனம் ஒன்று நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்களை வகுத்து பதவிக்கேற்ற பொறுப்பளித்து பொறுப்பை நிறைவேற்றக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கும். பணியாளருக்கு தலைமை வகிப்பதனால் பொறுப்புக்களை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு பணியாளருக்குச் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

15. திறமைக்கேற்ப பொறுப்பு பகிர்தல் :

பணியாளர் யாவரும் ஒரே மாதிரியான திறமை உடையவர்களாக இருக்க முடியாது. ஆகவே தலைமை வகிப்போர் பணியாளரின் திறமை கண்டு அதற்கேற்ப பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்றுவதுடன் சிறப்புத் தேர்ச்சியும் அடைவர்.

16. பொறுப்புக்களை நிறைவேற்ற கால எல்லை நிர்ணயித்தல் :

தலைமை வகிப்போர் பணியாளரிடம் பொறுப்புக்களை ஒப்படைக்கும் போது கால எல்லை வரையறுத்து ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு ஒப்படைத்து மேற் பார்வை செய்யும்போதுதான் பணியாளர்கள் அப்பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றுவர்.

17. நிறைவேற்றக்கூடிய பொறுப்பை ஒப்படைத்தல் :

தலைமை வகிப்போர், பணியாளர்கள் நிறைவேற்ற முடியாத பொறுப்புக்களை ஒப்படைத்தலாகாது. அவ்வாறின்றி ஒப்படைத்தால், பொறுப்பை ஏற்பர். ஆனால் இப்பொறுப்பை நிறைவேற்றுவதில் அக்கறை செலுத்தமாட்டார். ஆனால் இது நிறுவனத்தின் தொழில் உறவினை பாதகமான நிலைக்கு இட்டுச்செல்லும்.

18. நிலைமைக்கேற்ப வழிநடாத்துதல்;

தலைமை வகிப்போர் நிறுவன வளங்கள், பணியாளர் மனோநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஊழியரை வழிநடாத்துதல் வேண்டும். அப்போது தான் ஊழியரின் ஒத்துழைப்பைப் பெற முடியும்.

தலைமை வகிப்பவர் ஈடுபடும் முயற்சிக்கு ஏற்ப தன் கீழ் உள்ள பணியாளர்களை வழிநடாத்த வேண்டும். உதாரணமாக, பொதுமக்களுடன் தொடர்புடையவர், பொது மக்களுடைய ஒத்துழைப்பை பெறக்கூடியளவுக்கு கீழ்மட்டத்தில் உள்ளவர்களை அன்பாகக் கடைப்பிடித்து அணுகுமுறையினைக் கடைப்பிடிக்கின்ற அளவுக்கு அவர்களை வழிநடாத்த வேண்டும். யுத்த முனையில் வழிநடாத்துபவர் அதிகார ரீதியாக கீழ்மட்டத்தவரை வழி நடாத்த வேண்டும்.

வழிநடாத்தப்படுவோரின் முதிர்ச்சித் தன்மை, கல்வியறிவு, வழங்குகின்ற பங்களிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வழிநடாத்த வேண்டும். உதாரணமாக இலக்கை அடைவதற்கு ஒத்துழைப்பு வழங்குபவரை மேலும் மேலும் நெருக்கடிக்குள்ளாக்கக் கூடாது. ஒத்துழைப்பு வழங்காதவரிடமே ஒத்துழைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட பணியாளர், தொகுதியை வழிநடத்துபவர் சூழல் காரணிகளையும் கருத்தில்கொள்ள வேண்டும் நிறுவனம் தொடர்பான விதிகள், பொதுச்சட்டம், தொழிற்சங்கங்களின் பலம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு வழிநடாத்த வேண்டும். உதாரணமாக தொழிற்சங்கம் பலமானதாக இருக்கும் போது, தொழிலாளர் தொடர்பான விடயங்களை கையாள்வதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்

டும். இல்லையேல் முகாமைக்கும் பணியாளருக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதால் நிறுவனத்தின் வளர்ச்சி பாதிப்படையும்.

## 4.0 முடிவுரை

தலைமைத்துவப் பொறுப்பில் உள்ளோர் தலைமைத்துவத்திற்குரிய பண்புகளைப் பின்பற்றுவதுடன் அப்பொறுப்பை ஏற்கும் போது வருமானம், பதவி, பொழுதுபோக்கு, அந்தஸ்து, பிறர்மீது ஆதிக்கம் செலுத்துதல், பாதுகாப்பு ஆகிய நோக்கங்களுக்கு முதன்மை கொடுக்காது ஏற்ற பொறுப்பினை நிறைவேற்றி சாதனை படைப்பேன் என்ற மனவுறுதியுடன் தலைமை வகிப்பவராயின் இலக்கினை இலகுவாகவும் விரைவாகவும் அடைவார் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

அதி உன்னத சத்துணவு

ஜீவாகாரம்

JEEVAKARAM

- ★ வளர்ந்துவரும் குழந்தைகட்கும்
- ★ கர்ப்ப தாய்மார்களுக்கும்
- ★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- ★ போசாக்கு குறைவான குழந்தைகளுக்கும்

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உணவாகும்

இவ்வுணவு பொரி அரிசி மா, வறுத்த சோயா மா, வறுத்த உழுத்தம்மா ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்டது. 100 கி. மாவில் 16.5 கி புரதமும் 400 கி கலோரி சக்தியும் அடங்கியுள்ளன. மேலும் இதில் உடம்பிற்குத் தேவையான விட்டமின்களும் மின்னறல்களும் அடங்கியுள்ளன

அண்ணா தொழிலகம்

இணுவில்.

# முகவரிகள் தொலைந்துவிட்ட எவன் சட்டம் இனி எமக்கெதற்கு?

இருள் கனிந்த அண்டவெளியில்
நிலவும் இங்கே நில்லாமல் மறைந்த வேளை
யுத்த மேகங்கள் கருக்கொண்டு
தத்தெடுத்த தழல் குண்டுகள்
வானைக் கிழித்து
தமிழீழ மண் எங்கும்
தீக் குண்டு மழை பொழியும்
போர்க்காலம் இது.

குழந்தையும் கிழமும்,
குருவியுடன் கூடவே
கருகி இறந்து போகும்
மரணங்களும் அவலங்களும்
நாளாந்த நிகழ்வாகிவிட
மனித அழிப்பினையும் மண் பறிப்பினையும்
தடுக்க
மன்னவர்கள் போராடி
வெற்றிக் களம் பல கண்டு
வித்துடல்களாய் விதையுண்டு
சத்திய வேள்வி நடக்கும் காலம் இது.

தமிழ் தேசங்கள் தோறும்
திருக் கோலங்கள் மாறி
தெருத்தெருவாய் - மக்கள்
திசை மாறிப்போகும்
தெருவோடு உடல்கள்
சிதைவாகிக் காணும் - விலங்கும்
தீண்டாமல் நாறும்
தமிழீழ மண்ணில் தினம் - இது
தலைவிரித் தாடும்
இனவாதச் சிங்களம் - தமிழ்
இன அழிப்பு நடத்தும்
கொடுங்கோலாட்சிக் காலம் இது.

பொருளாதாரத் தடையும்
போக்குவரத்துப் பாதை அடைப்பும்
தமிழர் வாழ்வை
இருளடைத்து நிற்க
பசி பட்டினியும்
நோய் நொடியும்
போட்டியிடும் வேளையில்
விடிவை நோக்கிய பயணத்தில் – மக்கள்
விழுதுகளாய் வேரோடி
விருட்சங்களை உருவாக்கும்
வீர வேட்கை நிறைந்த காலம் இது.

தமிழழரசு தமிழீழ தனியரசு
உருவாகி வரும் நிலையும்
சகலகலா வல்லமையால்- உலக
வரலாறு காணாத புதிய பல
சரித்திரங்கள் படைத்து வரும்
தமிழினத் தலைவன் நிலைகண்டு
அஞ்சி நடுங்கும்
அன்னிய தீய சக்திகள்- உருவாகிவரும்
தமிழின வரலாற்றை
அழிப்பதற்காய் பின் தொடர்ந்து
குழி பறித்து வரும் காலமிது.

இத்தனைக்கும் மத்தியிலும்- தடை
அத்தனையும் தகர்த்தெறிந்து- தர்ம
யுத்தம் நடத்தி வரும் வேளையிலும்
சட்டம் ஒழுங்கு கெட்டு- மக்கள்
கட்டுக் ( கோப்பு ) குலையும் நிலைகண்டு
திட்டமிட்டு எம் செயல் வீரர்
கட்டி எழுப்பிய காவல்துறைக்கும்,
நீதித்துறைக்கும்
கலங்கரையாய் உதயமானது
தமிழீழ] ஒறுப்புச் சட்டம்.

சட்டத்தின் வரிகளிலே
சுட்டி நிற்கும் தனித்துவங்களை
செந்தமிழில் சீரதனை நோக்கின் . . . .
நிரபராதி தண்டிக்கப்படக் கூடாது
ஆனால்
திரை மறைவிலும் கூட குற்றவாளி
எவரும்
தப்பிக்கொள்ளக் கூடாது.

தனி வழியில் நடு நிசியில்
தனியொரு பெண் செல்வதற்கு
தடை எதுவும் இருக்கக் கூடாது.

தந்தை பெயர் தெரியாத
தலைமுறைகள் தமிழீழமதில்
வந்து பிறக்கக் கூடாது.

பெண் நிந்தைகள் செய்வோர் - தமிழ்
மண்ணில் என்றுமே
இருக்கக் கூடாது.
இம் மண்ணின் மைந்தர்கள் எவரும்
இனிமேலும் தமிழீழத்தில்
இழிவு படக்கூடாது.

கொலை களவு கொள்ளையும்
கொடும் பெண்ணடிமையும்
மற்றும் பாலியல் வல்லுறவு எனப் - பாரிய
குற்றங்கள் நிகழாது
முற்றாக ஒழிய
புத்துயிர் பெற்றது- தமிழீழ
ஒறுப்புச் சட்டம்.

மலரும் தமிழீழத்திற்கு
புலரும் பகலவனாய்
நிகழும் கருவொன்று
தமிழீழ ஒறுப்புச் சட்டம்

நிலவும் குற்றங்களைத் தடுத்து - மக்கள்
சத்தியத்தின் வழியினிலே
சமநீதி பெற்று விட
தமிழர் சரித்திரம் ஆகி விட்ட
தமிழீழ ஒறுப்புச் சட்டம்.

முகவரிகள் தொலைந்து விட்ட
எவன் சட்டம் இனி எதற்கு?
முகை அவிழ்ந்து மணம் கமழுது பார்
தமிழீழ ஒறுப்புச் சட்டம்- இனிய
தமிழ் நடையில் உருவாக்கம் கொண்ட
தமிழீழ ஒறுப்புச் சட்டம் வாழி.

— க. புவனேஸ்வரன் —

# குடும்ப ஆலோசனைச் சபை

எமது 'தேசியத் தலைவர் 22. 10. 1994 - இல்' 'குடும்ப ஆலோசனைச் சபை'யை உருவாக்கி, குடும்ப ஆலோசகர் மூலம் பிரியும் குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழீழ நீதிமன்றுகள் ஒவ்வொன்றிலும் குடும்ப ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு கடமை புரிந்து வருகிறார்கள்.

சமுதாய வளர்ச்சியிலே காலம் காலமாக பெண் அடிமைத் தனத்தை ஆண் வர்க்கம் நிலை நிறுத்த முயற்சித்து அதில் இப்பொழுதும் வெற்றி கண்டுள்ளது. ஆனால் மனித சமூக வளர்ச்சியில் பெண் ஆதிக்கம் இருந்த காலமும் உண்டு. தேன் கூட்டில் ராணி வண்டு எவ்வித ஆதிக்கத்தை செலுத்தியது என்பதை வைத்துக் கொண்டு, கால் மாக்சுடன் சேர்ந்து உலகத்தில் பொது உடைமை இயக்கத்திற்கு வித்திட்ட ''பிறடோறிக் ஏங்ஞால்ஸ்'' தாய்க்குல ஆதிக்கத்தைப் பற்றி பல ஆராய்வுரைகளைப் பிரசுரித்திருந்தார்.

இவ்வாறு ஒரு காலத்தில் தாய்க்குலம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதும் படிப்படியாக ஆரியவாதம் முனைப்பு எடுத்து, பின்னர் தாய்க்குலத்தின் ஆதிக்கத்தை ஒடுக்கி, அவர்களை ஓர் அழகுப் பொருளாகவும், குழந்தைகளை உற்பத்தியாக்கும் இயந்திரங்களாகவும் மட்டம் தட்டியது. அந்த நிலையில்தான் இழிவான சீதனக் கொடுப்பனவு வழக்கமும் ஏற்பட்டது. இந்தச் சீதனத்தின் அடிப்படையில் நடந்த விவாகங்களும் பொதுவாகத் திருமணப் பிணக்குகளை உருவாக்குகின்றன. காதல், அன்பு என்ற அம்சங்களுக்கு இடங் கொடுக்காது அந்தஸ்து, பணம் போன்ற வற்றுக்கு முதல் இடங்கொடுக்கப்பட்டு பெண் விற்பனைப் பொருளாக மாற்றப் பட்டாள்.

இன்றைய சமுதாயத்தில் மேற்படி விடயங்கள் பல திருமணப் பிணக்குகளுக்கு காரணங்களாக இருந்தாலும், காதல் திருமணங்கள் கூட அவசரமாகத் தீர்க்க யோசனையுடன் செய்யாது, சிற்றின்ப வேட்கைக்கு மாத்திரம் இடமளித்து நடைபெறுவதால் அவையும் திருமணப் பிணக்குகளை உருவாக்குவதற்குக் காரணிகளாக இருக்கின்றன.

இந்த வேளையில் அதுவும் இப்போராட்ட சூழ்நிலையில் பல திருமணங்கள் அவசரமவசரமாக நடைபெறுகின்றன. அதே நேரத்தில் பேசிச்செய்த திருமணங்கள் கூட பொருளாதாரத் தேவைகளுக்காக கணவன் அல்லது மனைவி வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தொழிலுக்காகப் பெண்கள் வெளிநாடு செல்வது ஒப்பீட்டுரீதியில் குறைவு. வெளிநாடு செல்லும் கணவன் தான் சென்ற நாட்டில் உள்ள வசதிகளைப் பாவித்து, தன் சுயனல தேவைகளைப் பூர்த்தி செய்து, தனது சொந்த மனைவிக்குப் பணம் செலுத்தாது அவளை அநாதரவாக்கி விடுகின்றான்.

இப்படியான நிலைகளில் நீதிமன்றுக்கு திருமண விடயங்கள், குடும்ப விடயங்கள் சம்பந்தமான வழக்குகள் வந்து குவிகின்றன. திருமண விடயங்கள், குடும்ப விடயங்கள் ஏனைய குற்றவியல், குடியியல் வழக்

குகள் போன்றல்லாது, மன உணர்ச்சிகளின் அடிப்படையில் ஏற்படுகின்றன. ஆகவே நீதி மன்றுகள் இவற்றை ஏனைய வழக்கு கள்போல் ஓர் அளவுகோலின் அடிப் படையில் தீர்த்துவைக்க முடியாது. இங்கே தான் குடும்ப ஆலோசகர்களின் தேவை யும், அவசியமும் ஏற்படுகின்றது.

குடும்ப ஆலோசகர்கள், தமிழீழ நீதி மன்றுகளில் தாக்கல் செய்யப்படும் திருமண நீக்கல் வழக்குகள், பராமரிப்பு வழக்குகள், பிள்ளைகளின் பாதுகாப்பு பராமரிப்புத் தொடர்பான வழக்குகளில் உள்ள பிணக் குகளை, வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட முன் சமரசமாகவும், சுமுகமாகவும் தீர்த்து வைப்பதற்குத் தம்மாலான முயற் சிகளை எடுப்பர். குடும்ப ஆலோசகர்கள் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோ ரைத் தனித்தனியாகவும், ஒருமித்தும் எவ் வித கட்டுப்பாடுமின்றி, தங்களது கருத்துக் களையும், உணர்வுகளையும் மனம் திறந்து வெளிப்படுத்துவதற்க வச திகளை உருவாக்குவர், இதை விட சம் பந்தப்பட்ட குடும்பங்களோடு பிணக்கின் தொடர்புடைய உறவினர்கள், அயலவர் கள் போன்றோரையும் விசாரணை செய்து அவர்களால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் மாற்றங்களை ஆராய்ந்து பிரி ந்த குடும்பங்களை ஒற்றுமையாக்குவதற்குத் தங்களால் ஆன முயற்சிகளைச் செய்வர். பிணக்குகளைத் தாம் முயன்றும் தீர்க்கப் படாவிடின், வழக்குகள் மீள நீதிமன்றுக்கு அனுப்பப்படும் அதன் பின் நீதியா ளர், ஏனைய வழக்குகள் விளங்குவது போல் சாட்சியங்களின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் விசா ரணை நடத்தி தீர்ப்பு வழங்குவார்.

இந்த விடயத்தில் குடும்ப ஆலோசகர் கள் தாம்பத்திய உறவினால் பிறந்த குழந் தைகளின் நலனையே முக்கியமாகக் கருத் தில் எடுத்து, அவர்களின் எதிர்கால வாழ்க் கைக்குப் பங்கம் விளைவிக்காத வண்ணம் தமது ஆலோசனைகளை வழங்கித் தீர்மா னங்களை எடுப்பார்கள். இதன் பின்னர் பிள்ளைகளின் பூரணமான உடல் உள வளர்ச்சிக்குப் பெற்றாரின் ஒற்றிணைப்பின் முக்கியத்துவம் ஆலோசகர்களால் அவர் களுக்கு உணர்த்தப்படுகின்றது. அத்துடன் தாய், தந்தையர் ஒவ்வொருவருடனும் பற்றுப் பாசமாகப் பழகுகின்றபோது அச் செயலானது பிள்ளைகளின் மனதில் உற் சாகத்தையும், மன உறுதியையும், மகிழ்ச் சியையும் கொடுக்கின்றது.

தாய், தந்தையரின் அன்புப் பிணைப் பில் உருவானவர்களே பிள்ளைகள். ''பிள் ளைகள் நாங்கள் பெற்ற செல்வங்கள்'' என்ற உணர்வு பெற்றாரிடத்தில் மேலோ ங்குமானால் அவர்களிடையே உள்ள கோப தாபங்கள் மறைந்து, குடும்ப ஐக்கியம் தானாகவே மலரும். பெற்றாரின் பிரி வினைக்கிடையில் சிக்கித் தவிக்கும் குழந் தைகள், தங்கள் சகபாடிகள் பெற்றாரு டன் இணைந்து ஆலயங்களுக்கும், வைப வங்களுக்கும், விழாக்களுக்கும் செல்வதை அவதானிக்கும்போது, அவர்களின் மன தில் எழும் ஏக்கத்தை யாராலும் மதிப்பிட முடியாது. எனவே கணவன், மனைவியை ஒற்றுமையாக்கும் விடயத்தில் பிள்ளை களின் எதிர்கால முன்னேற்றம் மிக இறு க்கமாக வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வாறே ஏனைய காரணங்களையும் ஆராய்ந்து, தனித்தனியே அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் மனச்சுமையை இறக்க, அவர்களை ஒரு தெளிவான நிலை க்கு இட்டுச் செல்வது குடும்ப ஆலோசக ரது முதற்பணியாகின்றது. பின்னர் அவர் களுடைய ஆரம்பகால நினைவுகள், செயல் கள் மூலம் அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றார். இறுதியில் குடும்பத்தின் எதிர்கால ஒற்றுமைக்குக் குடு ம்ப ஆலோசகரே பொறுப்பாக நிற்பதால் குடும்பங்கள் ஒற்றுமையை நாடிச்செல்கின் றன. இவ்வாறே பிரிந்துள்ள குடும்பங்கள் எல்லாவற்றையும் குடும்ப ஆலோசகர்க ளால் ஒற்றுமையாக்க முடியாவிட்டாலும் கூட, ஒன்றிணைந்து செல்லும் குடும்பங்களு க்கு 'குடும்ப ஆலோசனைச் சபை' ஒரு வரப் பிரசாதமாக அமைந்துள்ளதை யாரும் மறுக்க முடியாது. இச்சபை ஆரம்பமான பின் ஒற்றுமையாக்கப்பட்ட குடும்பங்கள் எப்போதும் எங்கள் தேசியத் தலைவருக்கு நன்றி உடையவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

— தி. கஸிரம்ணி —

# கோரக் காட்சி

கற்பனைப் பூச்சை தூரத்தே தூக்கி எறிந்து நீதி கண்டு வடிக்கப்படுகின்ற இந்நிகழ்வில், கைகோர்த்து ஓடி விளையாடி தாயவளின் அரவணைப்பில் ஒதுங்கும் ஓர் இளந்தளிரின் பசும் எண்ணங்கள், நினைவலைகள் நார் நாராகக் கிளித்தெறியப்பட்டு, தும்பு தும்பாக அதன் வாழ்க்கை தூரத்தே வீசி எறியப்பட்ட கோரக் காட்சியின் பக்கம் திரும்புகின்றேன். என் பேனா முனையில் அறிந்திடுவீர் அந் நிகழ்வை.

சுதந்திரம் என்பது எந்தவொரு நாட்டிலும் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய ஓர் அம்சமாகும். கட்டில் மெத்தையோடு காசுப் பெட்டியும் சேர்ந்திருந்தாலும் சுதந்திரம் இன்றிச் சந்தோசம் காண்பது அரிது. சுதந்திரத்திற்காகப் பல நாடுகளில் உயிர் நீத்த வீரர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை. இதற்கு தமிழீழமும் விதி விலக்கல்ல. சொந்தத் தாய் நிலத்தில் தொந்தரவின்றி மாந்தர் குலம் உலாவர வேண்டும். அவ்வாறே இளம் பிஞ்சுகளும் பசும் எண்ணங்களுடன் வளர்ந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அதுவன்றி அப்பிஞ்சை முரட்டியல்பான செயலுக்குட்படுத்தி அதன் பசும் எண்ணங்களைக் கசக்கி எறிந்து, அப்பிஞ்சின் வாழ்க்கையை சாம்பலாக்கும் செயல்புரிவோர் சமுதாயத்தின் துரோகியாகவே எண்ண வேண்டும். அறிவியலாளரின் கருத்துப்படி இளம் வயதினரிடையே புகுத்தப்படுகின்ற நிகழ்வுகள், கருத்துக்கள் தூய்மையானதாகவும் அப் பிள்ளையின் எதிர்காலத்தை செழிப்பாக்குவதாகவும் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அன்றொரு நாள் வன்னிப் பெரும் நிலத்தின் ஒரு பகுதியில் இளையோர்க்குண்டான குதூகலத்துடனும் வெண் மனத்துடனும் விளைவுகளை அறிந்தும் அறியாததுமான பன்னிரண்டு அகவை நிரம்பிய ஒரு பெண் குழந்தையின் வாழ்க்கை, கயவன் ஒருவனால் மழுங்கடிக்கப்பட்டது. ஆம் அன்று பகலவன் தன் கடமையை முடித்து வீடு செல்லத் தயாராகிக் கொண்டிருந்த வேளை, சற்று வெப்பமான அதன் பார்வை எல்லாம் உடலுக்கு இதமான ஒரு சுகத்தை அள்ளி வழங்கிக் கொண்டிருந்தது. இயற்கைக்குக் குறைவில்லாத அந்த இடத்தில் எங்கு பார்த்தாலும் பச்சை மரங்கள் தமிழீழத் தாயை விட்டுப்பிரிய மனமின்றி ஆழக் காலூன்றி இறுகப் பற்றிப் பிடித்திருந்தபோதிலும், ஆங்காங்கே தெரிந்த வெளிகளின் ஊடாகப் பகலவனின் சுகத்தை கூட்டமாகச் சேர்ந்து பறக்கும் பட்சிகளையும் மாலா தரிசித்து குதூகலமாக அகமகிழ்ந்திருந்தாள். பதினொரு வயதினை இனிது நிறைவேற்றிக் கொண்டு பன்னிரண்டு அகவையில் அடியெடுத்து வைத்து, சற்றுக் காலங்களான மாலாவின் வதனத்தில் பால் மணம் மாறாத தன்மையைப் பார்த்தவுடன் யாரும் கூறி விடுவார்கள். அக்கிராமத்து மக்களைப்போல் அதிகாலையிலேயே தங்கள் வாழ்க்கையை தொடக்க அவளுடைய பெற்றோர் பழக்கப்பட்டிருந்த போதிலும் பாடசாலைக்குச் செல்ல சற்று முன்னதாகவே அவள் பள்ளியெழுந்து காலைக் கடன்களை முடித்து தாயவளால் பரிமாறப்படும் உணவினை உண்டு பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பியதும் தனது பொழுதினை, அந்த இயற்கையை அனுபவிப்பதில் செலவழிப்பதே நாளாந்த அவளது வழமையாகியது.

இயற்கைக் காட்சி என்றாலே மாலாவிற்கு கொள்ளை இன்பம். பாடசாலையில் ஓவியம் வரைவதென்றால்கூட தான் ரசிக்கின்ற, ரசித்திருக்கின்ற காட்சிகளையே வரைவாள். இவற்றினை எல்லாம் துல்லியமாக அறிந்திருந்த பெற்றோர் தங்களுடைய தூரத்து உறவான

குகனுடைய பிள்ளையின் பிறந்த நாளுக்குச் செல்ல எவ்வாறாயினும் மகளை இன்று அழைத்துச் செல்ல வேண்டும் என எண்ணியிருந்தனர். எனினும் முயற்சி செய்து பார்க்கலாம் என அவ்விடத்தை அவர்கள் நெருங்கிய போதுதான் தங்கள் முயற்சி கைகூடாது என உணர்ந்தனர். பெற்றோர்கள் தன்னிடத்திற்கு வந்துள்ளதை அறியாத மாலா, குயிலொன்றின் குரலோடு தன் குரலைப் போட்டியிட விட்டு, குஞ்சுக் குயில் போன்று கூவிக்கொண்டிருந்ததை ஏற்றுக்கொண்டாற் போல மரத்திலிருந்த குயிலும் கூவியது. நிலத்திலிருந்த குஞ்சுக் குயிலும் மரத்திலிருந்த தாய்க்குயிலும் மாறி மாறி எழுப்பிய நாதத்தின் மத்தியில் நின்று கொண்டிருந்த மாலாவின் பெற்றோருக்கு தங்கள் ஆசை நிராசை என்பதை அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. ஆயினும் அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிப்பதற்காக அங்கு நின்று, முடிவெதுவும் தென்படாததன் விளைவால் தாங்கள் மட்டும் செல்லத் தீர்மானித்து மாலாவிற்கு தெரியப்படுத்திய தோடு தனிமையில் இருக்கும் போது அவதானமாக இருக்குமாறு அறிவுரை புகட்டினர். இவற்றிற்கு இருமுறை தலையை மட்டும் ஆட்டிப் பதிலளித்த மாலா, தொடர்ந்தும் குயிலுடன் பாட்டுப்பாடி மகிழ்வதைக் கண்டு இன்புற்ற பெற்றோர் பிறந்த நாளுக்குச் சென்று விட்டனர்.

பிறந்த நாள் வீட்டில் பலவித உணவுகளுடன் சின்னஞ்சிறுசுகள் ஓடி விளையாடி, பலகாரங்களைப் பகிர்ந்தும், பறித்தும் சாப்பிடும் நிகழ்வைப் பார்த்து, மாலாவும் வந்திருந்தால் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பாள் என பெற்றோர் பெருமூச்சு விட்டாலும் குயிலுடன் விளையாடுவதில் உள்ள சந்தோசம் இதில் அவளுக்குக் கிடைக்காதென தங்களைத் தேற்றிக் கொண்டு இருந்த நேரத்தில் பகலவன் கிரகணங்களை தன் இறக்கைக்குள் மறைத்துக்கொண்டிருந்தான். அவ் வேளையில் வெளியில் சென்று நீண்ட நேரத்தின் பின் வந்த குகன், மாலாவின் பெற்றோரை உற்றுப் பார்த்து ''நான் உங்களுடைய வீட்டில் பீடிக்கு நெருப்பு வாங்கச் சென்ற போது, அயலவர்கள் பார்த்தவர்கள், வீண் பிரச்சனை வரப்போகிறது'' எனக்கூறினான். இதனைக் கேட்ட மாலாவின் தாயும் தந்தையும் நிலைமை எதுவும் புரியாமல் குழப்பமாக இருந்த போதிலும், வெளியே அதனைக் காட்டாது சற்று நேரம் இருந்தனர். அக் குழப்பத்தை நீடிக்க விடாது, மாலா அங்கே தோன்றி பேரிடி ஒன்றை அவர்கள் காதில் தூக்கிப் போட்டாள். பெற்றோர்கள் தன் வீட்டில் பிறந்த நாளுக்கு வந்திருந்ததை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய குகன், மாலா தனிமையில் இருப்பாள் என்பதை நன்கு உணர்ந்து அங்கு சென்றான். குகன் ஒரு குழந்தைக்குத் தந்தை என்பதோடு 21 அகவை நிரம்பிய அவனது உடல் கமம் செய்து வலிமையாகவும் இருந்தது. மாலா மீது அவன் பல நாளாக ஆசை வைத்து இருந்த பொழுதிலும் குகன், மாலாவிற்குத் தந்தைபோன்றவன் என்பதோடு சொந்தக்காரன் என்னும் அடிப்படையில் தவறாக எதுவும் நடைபெறாது என்று பெற்றோர்கள் நம்பியிருந்த போதிலும், குகனுடைய விகாரக் கண்கள் மாலாவை விழுங்குவதைப்போல் அவன் பின்னால் நின்றதை மாலா அறியவில்லை. பட்சிகளைப் பார்த்து ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த மாலாவின் கைகளைப் பற்றி தரதர வென இழுத்து வீட்டிற்குள் கொண்டு சென்றான். மாலா கத்த முயற்சித்தும் தோல்வி கண்ட அந்த இளம் மொட்டு பூவாகி, பிஞ்சாகி, காயாகி, கனியாகும் முன்பே கரியாக்கப்பட்டு விட்டதை, விம்மலுடன் தன் தாய்க்கு ஒவ்வொன்றாகக் கொட்டி அழுதாள். பசும் நினைவுகளுடன் சந்தோசமாக மாலையில் இருந்த மாலாவின் எண்ணங்கள் கசக்கி எறியப்பட்டு விட்டதை அவளது வதனம் கோடிட்டுக் காட்டியது.

அதை அறிந்து கொண்ட அவளது தாய், தன் மகளுக்கு நடந்த கொடுமை வேறு பெண்களுக்கு நிகழக்கூடாதென துள்ளி எழுந்தாள். அவள் பத்து மாதம் சுமந்து பல கோட்டைகள் கட்டி வைத்தவற்றை எல்லாம் இடித்துத் தள்ளி

நார் நாராக அவள் வாழ்க்கையைக் கிழித்தவனுக்கு தக்க ஒறுப்பு வழங்க வேண்டும். என ஆவேசம் கொண்டு முறை மன்றில் குகனை முன்னிறுத்தினாள். தாங்கள் இருவரும் விரும்பியே உடலுறவு கொண்டதாக குகன் ஒரு பாதுகாப்பு வாதத்தை முன் வைத்த போதிலும், பதினான்கு வயதிற்குட்பட்ட பிள்ளையின் சம்மதத்துடன் உடலுறவு கொண்டாலும் தமிழீழச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளின் படி, அது வல்லுறவு என்றதன் பிரகாரமும் மருத்துவ அறிக்கையின் பிரகாரமும் பாலியல் வல்லுறவுக்கான குற்றவாளியாகக் காணப்பட்டு மேற்கண்ட குற்றத்தை விசாரணை நடத்திய மன்று குறித்த குகன் மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டிற்கு குற்றவாளியாகக் கண்டு எமது தமிழீழப் பகுதியில் இப்படியான கடும் குற்றங்கள் இழைக்கப்படக் கூடாது என்பதற்காக, வளர்ந்து வரும் இளம் பெண்களின் வாழ்வினை எந்த முறையிலும் சட்ட திட்டங்களுக்கு முரணான வகையில் மழுங்கடிக்கப் படக் கூடாது என்ற கருத்துடனும் குறித்த குகனுக்கு மரண தண்டனை வழங்கியது.

— க. அன்பு —

## பாலியல் வன்முறை

''தமிழீழ சட்டக் கோவையின் பாலியல் வன்முறை பிரிவு ''01'' இன் உப பிரிவு ''உ'' வுக்கு அமைவாக 14 வயது பூர்த்தியாகாத பெண்ணுடன் அப் பெண்ணின் சம்மதத்தைப் பெற்றும் பெறாமலும் புரியப்படும் உடல் உறவானது குற்றமாகையால், இக் குற்றத்திற்கு தமிழீழ சட்டக் கோவையின், பாலியல் வன்முறை என்ற பகுதியின் 03 ஆம் பிரிவின் உப பிரிவு ''அ'' வுக்கு அமைவாக சாவொறுப்பு வழங்கப்படும்.''

சிலர் அதிக இளமையிலேயே மரிக்கின்றார்கள். சிலர் அதிக கிழமான பின்பு மரிக்கின்றார்கள் அப்படியிருக்கும்போது '' சரியான சமயத்தில் சாக வேண்டும்'' என்கின்ற கொள்கை விசித்திரமாகத்தான் ஒலிக்கின்றது.

— சிந்தனையாளர் நியெட்ஸே —

தமிழீழ நீதிமன்றுகளில் குற்றவியல் வழக்குகள் ஆரம்பத்தில் தமிழீழச்சட்டக் கோவையின் அடிப்படையில் நடைபெறலாயிற்று. இச்சட்டம் 1993ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைமுறைக்கு வந்தது. பின்னர் தற்போது தமிழீழ ஒறுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஒறுப்புச் சட்டம் 1994ஆம் ஆண்டு மார்கழி மாதம் அமுலுக்கு வந்தது.

ஒவ்வொரு குற்றவியல் வழக்கும் அந்தந்த மாவட்ட நீதிமன்றின் நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட காவல்பணிமனை ஊடாகவே பெரும்பாலும் தாக்கல் செய்யப்படுகின்றது. இதேவேளையில் தனிப்பட்ட குற்றவியல் வழக்குகளையும் தாக்கல் செய்ய தமிழீழ சட்டக் கோவையில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் எல்லைக்குட்பட்ட ஆனைக்கோட்டை என்னும் இடத்தில் மாவீரர் சுதர்சன் வீதியிலுள்ள 14ஆம் இலக்க இல்லத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் என்பவருடைய வீட்டில் 1995ஆம் ஆண்டு வைகாசி மாதம் 14ஆம் திகதி நள்ளிரவு ஒரு மணியளவில் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான திரவப்பணமும் களவு போய் விட்டது என உதாரணத்திற்கு வைத்துக் கொள்வோம்.

களவு போன பொருள்களின் உரிமையாளரான வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் யாழ்ப்பாண காவல்பணிமனையில் தமது பெயரில் ஒரு முறைப்பாட்டைச் செய்கின்றார். இந்த முறைப்பாட்டை யாழ்ப்பாணக் காவல் பணிமனையில் அந்த நேரம் கடமையாற்றுகின்ற 146ஆம் இலக்க காவல்துறை உறுப்பினரான ஞானப்பிரகாசம் அவர்கள் பதிவு செய்கின்றார். இந்த முறைப்பாடு யாழ்ப்பாணக் காவல்பணிமனைப் பதிவுப் புத்தகம் சி. ஐ. பி. 27 / 180 இல் பதிவு செய்யப்படுகின்றது. இப்போது முறைப்பாட்டைப் பதிவு செய்த காவல்துறை உறுப்பினரிடம் தனது வீட்டில் களவு போனமைக்கு தனது ஊரில் வசிக்கும் ராமசாமி என்பவரும் அவரது நண்பர்களான முத்துக்கறுப்பன், சின்னச்சாமி ஆகிய மூவர் மீதே தனக்குச் சந்தேகம் இருப்பதாக முறைப்பாட்டுக்காரரான வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் தெரிவிக்கின்றார்.

○
○
○

## தமிழீழ நீதிமன்றில் குற்றவியல் வழக்கு ஒன்று எப்படி நடைபெறுகிறது?

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் யாழ்ப்பாணக் காவல்பணிமனையில் கடமையாற்றும் வேறு இரண்டு காவல்துறை உறுப்பினர்களான இலக்கம் 114, 185 ஆகியோருடன் இணைந்து காவல்துறை உறுப்பினர் ஞானப்பிரகாசம் புலன்விசாரணைகளை மேற்கொள்கின்றார். சந்தேக நபர்களான மூன்று பேரையும் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்ததோடு தொடர்ந்தும் மேற்கொண்டு விசாரணைகளை மேற்கொள்கின்றார். களவு இடம்பெற்ற முறைப்பாட்டுக்காரரான வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் வீட்டைப் பார்வையிட்ட காவல்துறை உறுப்பினர்கள் மூவரும், எதிராளிகளால் களவாடப்பட்ட

பொருள்களின் ஒரு பகுதி பணத்தையும் ஒரு பகுதி நகைகளையும் பிறிதொரு இடத்திலிருந்து மீட்டுவிட்டார்கள் என வைத்துக் கொள்வோம்.

ஒருவரைக் கைது செய்தால்
அவரைக் கைது செய்த
திகதியிலிருந்து
ஏழு தினங்களுக்குள்
தகுதி வாய்ந்த நீதிமன்றின்
முன் ஆஜர் செய்ய வேண்டும்
என 1993ஆம் ஆண்டின்
02 ஆம் இலக்கச் சட்டம் கூறுகிறது.
இதன்படி தமிழீழ காவல்துறையினர்
சந்தேக நபர்கள்
மூவரையும் கைது செய்து
''ஆ'' அறிக்கையின்
கீழ் நீதிமன்றில்
முற்படுத்துகின்றபோது எதிராளிகள்
சார்பில் ஆஜராகும்
சட்டத்தரணி இவர்களைப்
பிணையில் விடுமாறு
நீதியாளரிடம்
கோரிக்கை விடுவார்.

இவர்களைப் பிணையில்
விடுவதானால் தமது விசாரணைக்கு
அது பாதகமாக
அமையலாம் எனக்
காவல்துறையினர் ஆட்சேபித்தால்
அல்லது மேற்கொண்டு
விசாரணை செய்ய வேண்டிய தேவை
இருக்கின்றதென காவல்துறையினர்
குறிப்பிட்டால், நீதியாளர்
21 நாட்களுக்கு மேற்படாத
காலப்பகுதிக்குத் தொடர்ந்தும்
தடுப்புக் காவலில் வைக்குமாறு
உத்தரவிட
தமிழீழ சட்டக் கோவையில்
சட்ட ஏற்பாடுகள் உண்டு.
சந்தேக நபர்கள் பிணையில்
விடப்படுவதை காவல்துறையினர்
மீண்டும் ஆட்சேபித்தால்
மேலும் இருபத்தியொரு நாட்களுக்கு
மேற்படாத காவல் பகுதிக்கு
சந்தேக நபர்களை
தடுப்புக் காவலில் வைத்து
விசாரணை செய்வதற்கு
உத்தரவு பிறப்பிக்க
அதிகாரம்
தமிழீழ சட்டக் கோவையின்படி
நீதியாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.
நிலைமைக்கு ஏற்ப
நீதியாளர் தனது தற்றுணிவு
அதிகாரத்தைப் பயன்படுத்துவார்.
சந்தேக நபர்கள் பிணையில்
விடப்படுவதை
காவல்துறையினர் ஆட்சேபிக்காவிடின்
நீதியாளர் சரீரப் பிணையிலோ,
ஆட்பிணையிலோ,
தேவை ஏற்படின்
ஆதனப்பிணையிலோ நிலைமைக்கு
ஏற்ப சந்தேக நபர்களை பிணையில்
விடுவிக்கலாம். மிக நெருங்கிய
உறவினர்கள் பிணையாளியாக
இருக்க முடியாது.

சந்தேக நபர்கள்
அடுத்த தவணை நீதிமன்றில்
முற்படுகின்றபோது
காவல்துறையினர் சந்தேக நபர்களை
எதிராளிகளாக்கிக்
குற்றப்பத்திரத்தை ( பிராது )
தாக்கல் செய்வர்.
குற்றவியல் குற்றங்கள் யாவும்
தற்போது
1994 ஆம் ஆண்டு மார்கழி மாதம்
அமுலுக்குக் கொண்டு
வரப்பட்ட
04 ஆம் இலக்க ஒறுப்புச் சட்டத்தின்
கீழ்தான் தாக்கல்
செய்யப்படுகின்றன.
இவ்வாறு வழக்குத் தாக்கல்
செய்யப்படும் போது
காவல்துறைப் பணிமனைப்
பொறுப்பாளர் வழக்குத்
தொடுனராகவும் காவல்பணிமனையில்
முறைப்பாடு செய்தவர்
முறைப்பாட்டுக்காரராகவோ,
சாட்சியாகவோ நீதிமன்றின் முன்
தோன்றுவார்கள்.

காவல்துறையினரால் பிராது தாக்கல்
செய்யப்படுகின்றபோது, அந்தக்
குற்றப் பத்திரம் நீதிமன்ற

# நீருக்கு வாய்க்கால்; நிலத்திற்கு வரப்பு...

சட்டம் என்பது எதற்கு?
மனிதனை
ஒரு வட்டத்தில் வாழ்
என
மட்டம் தட்டவா?
இல்லை
மனிதன் மனிதனாய்
மாண்போடு புனிதனாய்
மண்ணகத்தில் வாழ
மனிதனே வகுத்த வழி
ஆம்! நேர்வழி
வழியில்லாத காட்டில்
விழியில்லாத மனிதன்
கனிபறிக்கப் போன கதையாய்
வாழ்க்கை அமையாது.
நீதியின் ஒளியில்
நிம்மதி வழியில்
வாழ்வுப் பயணம் வடிவாய் அமைய
சட்டம்தான் எமக்கு உறுதுணை.
நீருக்கு வாய்க்கால்
நிலத்துக்கு வரம்பு
மரத்துக்கு வேர், மனிதனுக்குச்
சட்டம்.
கரை கடந்த காட்டாறு
பயன் நல்காது
வரப்பற்ற நிலம் வயலாகாது
வேரற்ற மரம் . . . . .
வாழ்வற்றுப் போகும்.
எனவே மனிதா . . . . . . !
சட்டத்தைப் பற்றுக் கோடாக்கி
உடன் பயணம் தொடர்
நீதி உனக்கு நிழல் விரிக்கும்
நிம்மதிக் கனி உன்கரம் கிடைக்கும்
வரலாறு உன் பெயரையும்
குறித்துக் கொள்ளும்.

— நிலா தமிழின் தாசன். —

முதலியாரால் மன்றில் எதிராளிகள் முன்பாக வாசித்துக் காட்டப்படும். நீதியாளர் முன்னிலையில் வாசித்துக் காட்டப்பட்ட குற்றச் சாட்டுகளின்படி நீர் குற்றவாளியா? சுற்றவாளியா? எனக் கேட்கப்படும்போது, எதிராளி தான் குற்றவாளி எனக் கூறினால் அது குற்றப்பத்திரத்தில் நீதியாளரால் பதியப்பட்டு தீர்ப்புக்காக ஒரு திகதி குறிப்பிடப்படும். தீர்ப்புக்கான திகதியை தீர்மானிப்பதில் நீதியாளர் பூரணமான தற்றுணிபு அதிகாரம் பெற்றவராவார்.

சந்தேக நபர்கள் தான் சுற்றவாளிகள் எனக் குறிப்பிடப்படுமிடத்து விசாரணைக்கான ஒரு திகதி நீதியாளரால் அறிவிக்கப்படும்.

விசாரணைத் திகதியன்று முறையீட்டாளர் சார்பில் சம்பந்தப்பட்ட காவல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் அல்லது ஒரு உப பரிசோதகர் நீதிமன்றில் பிரதம வழக்குத் தொடுநராகத் தோன்றி முறைப்பாட்டாளரைச் சாட்சிக் கூண்டில் ஏற்றி விசாரணைக்காக நெறிப்படுத்துவார். இதனை வழக்காளிசார்பிலான நெறிப்படுத்தல் என அழைப்பர்.

வழக்கு விசாரணையின் போது வழக்குத் தொடுநரான காவல் பணிமனைப் பொறுப்பாளர் அல்லது பிரதம வழக்குத் தொடுநர், முறைப்பாட்டாளர் சார்பில் வேறு சாட்சிகள் ஆகியோரும் எதிராளிகள் சார்பில் எதிராளிகள் அவர்களது சட்டத்தரணிகள், எதிராளி தரப்பிலான சாட்சிகள் ஆகியோரும் மன்றில் கட்டாயமாக சமூகம் கொடுத்திருக்க வேண்டும் என்பது நீதிமன்ற நடவடிக்கை நியதியாகும்.

குற்றவியல் வழக்குகளில் பிரதம வழக்குத் தொடுநரால் முறைப்பாட்டாளர் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் எதிராளி தரப்புச் சட்டவாளரால் முறைப்பாட்டாளர் குறுக்கு விசாரணை ( Cross Examination ) செய்யப்படுவார். குறுக்கு விசாரணையின் போது எதிராளி தரப்புச் சட்டவாளரால் கேட்கப்படும் கேள்விகளுக்கு மட்டுமே முறைப்பாட்டாளரால் பதில் அளிக்கப்பட வேண்டும் என்பது நீதிமன்றுகளில் பின்பற்றப்படும் நீண்டகால மரபு.

எதிராளி தரப்புச் சட்டவாளரது குறுக்கு விசாரணை முடிவுற்ற பின்னர் மீண்டும் பிரதம வழக்குத் தொடுநர் மன்றில் தோன்றி சாட்சிக்கூண்டில் நிற்கும் முறைப்பாட்டாளரை தேவையேற்படின் மீள் விசாரணை ( Re Examination ) செய்வார். மீள் விசாரணையின்போது பிரதம வழக்குத் தொடுநர் தனது நெறிப்படுத்தலின் போதும் குறுக்கு விசாரணையின்போதும் எடுத்துரைக்கப்பட்ட விடயங்களில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயங்களை மன்றில் தெளிவுபடுத்துவார்.

இதேபோல முறைப்பாட்டாளரைத் தொடர்ந்து அவர் தரப்பிலான சாட்சிகள் ஒவ்வொருவரும் மன்றில் நெறிப்படுத்தப்பட்டு குறுக்கு விசாரணைக்குப் பின்னர் தேவையேற்படுமிடத்து மீள் விசாரணைக்கும் முற்படுத்தப்படுவார்கள்.

இவ்வாறாக வழக்காளி சார்பிலா விசாரணைகள் பூர்த்தியானதும் எதிராளிகள் சார்பிலான விசாரணைகள் ஆரம்பமாகும். எதிராளிகள் சாட்சியமளிக்க விரும்பினால் எதிராளிகளை அவர் தரப்புச் சட்டத்தரணி நெறிப்படுத்துவார். பின்னர் இவர்களைப் பிரதம வழக்குத் தொடுநர் குறுக்கு விசாரணை செய்வார். பின்னர் மீள்விசாரணை இடம்பெறும்.

வழக்காளி தரப்புச் சாட்சிகளும் எதிராளி தரப்புச் சாட்சிகளும் சாட்சியமளித்து விசாரணை பூர்த்தியானதும் இரு தரப்பினரும் தொகுப்புரை வழங்குவதற்கான திகதியை நீதியாளர் நிர்ணயம் செய்வார். தொகுப்புரை குற்றவியல் வழக்குகளில் எழுத்து மூலம் வழங்கப்படும். அதைத் தெளிவுபடுத்தவிரும்பின் வாய் வழியாக பிரதம வழக்குத் தொடுநராலும் எதிராளி தரப்புச் சட்டத்தரணிகளாலும் வழங்கப்படலாம்.

தொகுப்புரைகள் யாவும் முடிவுற்ற பின்னர் நீதியாளர் தீர்ப்புக்கான திகதியை அறிவிப்பார். எதிராளிகள் குற்றவாளிகளாகக் காணப்படின் ஏற்புடைய தண்டனையால் தண்டிக்கப்படுவார்கள். இதற்கான சட்ட ஏற்பாடுகளை தமிழீழ ஒறுப்புச் சட்டம் கொண்டிருக்கின்றது. தமிழீழ மாவட்ட மன்று அளித்த தீர்ப்பில் திருப்தியடையாத எந்தவொரு கட்சியினரும் தமிழீழ மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு விண்ணப்பிக்கலாம். அங்கு மூன்று நீதியாளர்கள் முன்னர் ஒவ்வொரு மேன்முறையீட்டு மனுவும் விளங்கப்பட்டு தீர்ப்பு அளிக்கப்படும். இதுவே இன்று தமிழீழ மாவட்ட நீதிமன்றில் குற்றவியல் வழக்கு ஒன்று விசாரணைக்காக நடைமுறைப்படுத்தப்படும் முறையாகும்.

— பொன். பூலோகசிங்கம் —
சட்டவாளர்

குற்றம் எதுவென வரையறுக்கப்பட முன்னரே தண்டனை வழங்கும் முறை தோன்றி விட்டது. அதாவது குற்றச் சட்டம் வரையறுக்கப்பட முன்னரே சமுதாய விதிமுறைகளை மீறியவர்களுக்கு அல்லது மற்றவருக்குத் துன்பம் விளைவித்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு வந்தது. விபத்தில் ஒருவர் இறந்தால் அதற்குக் காரணமானவர்கள் மீது கொலைக்குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை சமூகத்தால் வழங்கப்பட்டு வந்ததுமல்லாது, உயிரற்ற பொருள்களால் ஒருவர் ஊறடைந்தாலும் மரணமடைந்தாலும் குறித்த சடப்பொருளைத் தண்டிப்பது அல்லது ஊரெல்லைக்கு அப்பால் எறிந்து விடுவதன் மூலமாகத் தண்டனை வழங்கித் திருப்தியடைந்தார்கள். மனிதனொருவனின் இறப்பிற்குக் காரணமாக விலங்கிருந்தால் கூட அவற்றிற்கும் தண்டனை வழங்கும் முறை ஆரம்ப காலங்களில் இருந்து வந்தது. எனவே தண்டனை வழங்குவதென்பது அண்மைக் காலத்தில் தோன்றியதல்ல என்பதை இவற்றினூடாக விளங்கிக்கொள்ள முடியும்.

தண்டனை வழங்கிய வரலாற்றைப் பார்ப்போமானால் அதில் துன்பத்திற்கு நேரடியாக யார் அல்லது எது காரணமாக இருந்தாலும் இவற்றின் மீது பழிக்குப்பழி என்ற முறையில் தண்டனை அளித்து வந்தார்கள் என்பதைக் காணலாம். உயிரற்ற சடப்பொருள்களைக்கூட அவை மனிதனது சாவுக்குக் காரணமாக இருந்திருப்பின் அவற்றின் மீது நீதி விசாரணை நடாத்தி அவற்றிற்கும் தண்டனை வழங்கி வந்தார்கள். அதாவது அவற்றை அழிக்கும்படி அல்லது நாட்டுக்கப்பால் எறிந்துவிடும்படி தண்டனை வழங்கினார்கள். ஒருவன் கோடரியால் மற்றவரை அடித்துக் கொன்றுவிட்டு நாட்டை விட்டு ஓடிய போது, கொலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட கோடரியை நீதிமன்றில் வைத்து குற்ற விசாரணை நடாத்தி, அதற்கு விடுதலை அளிக்கப்பட்டதாக ஐரோப்பிய தண்டனை வரலாறு கூறுகின்றது ஒரு மனிதன் தற்கொலை செய்து கொண்டால் அவர் இறப்பதற்குக் காரணமாக விளங்கிய இரு கைகளையும் வெட்டி எடுத்து அவற்றை வேறு இடத்திலும், கைகள் அகற்றப்பட்ட உடலை வேறு இடத்திலும் புதைத்து வந்தனர். இதே போன்ற பழிக்குப்பழி வாங்கும் உணாவுதான் இன்று விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த காலத்திலும் மனிதனிடம் காணப்படுகின்றது. யாராவது சுவரில் அல்லது கதவில் இடித்துக் கொண்டாலும் அவற்றைத் திருப்பி உடனே உதைப்பதும், அடிப்பதும் போன்ற செயல்களை இன்றும் சாதாரண மனிதர்கள் பலர் செய்கிறார்கள். அம்மனிதன் காடுகளில் வாழும் போது தானிருக்கும் குகையில் அல்லது குடிசையில் தன் உயிருக்கு ஊறு விளைவிக்கும் மற்ற உயிரினங்களையும் அழித்து வந்தான். தன் இனத்தவரே தனக்கு தீங்கு விளைவிக்கக்கூடுமென கருதிய நேரத்தில் அவர்களையும் கொன்று வந்தான். இதனாலேயே தற்காப்பு என்ற அடிப்படையில் பழிக்குப்பழி என்ற கொள்கையில் தண்டனை பிறந்தது. இது இயற்கை உணர்வினால் உலகிலுள்ள பெரும்பாலான உயிரினங்களுக்கும் அமைந்துள்ள குணாம்சங்களாகும் நாய், பாம்பு, தேள் என்பன தங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன்தான் பிறரைக் கடிக்க முற்படுகின்றன.

# குற்றத்தண்டனை அன்றும் இன்றும்

○
○
○

ஆரம்ப காலத்தில் இரத்தத்திற்கு இரத்தம், உயிருக்கு உயிர், கண்ணுக்கு கண் என என்ன குற்றம் இழைக்கப்பட்டதோ அதே மாதிரியான தண்டனை பெரிதும் வழங்கப்பட்டு வந்தது. அக்காலத்திலிருந்த கடுமையான, கொடூரமான தண்டனை முறைகள் இன்று அளிக்கப்படுவதில்லை. இவ்வாறு கொடூரமான தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தாலும் குற்றங்களை முற்றாகத் தடுக்க முடியவில்லை. மேலும் அக்காலத்தில் 'பழிக்குப் பழி' என்ற உணர்வை தீர்த்துக்கொள்ள தண்டனை வழங்கப்பட்டு வந்ததே தவிர, குற்றங்களைத் தடுப்பதற்காக வழங்கப்படவில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் அறிவு, நாகரிக வளர்ச்சிகளினால் மாற்றமடைந்ததோடு புதியநிலையிலான குற்றச்சட்டம் இயற்றப்பட்டு குற்றங்களுக்கான வரையறைகள் வழங்கப்பட்டதுடன், தண்டனை முறைகளும் மாற்றியமைக்கப்பட்டன. இந்த வகையிலேயே 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' தமிழீழ சமுதாயத்திலுள்ள குற்றங்களையும் அதற்கான தண்டனைகளையும் வரையறை செய்யும் வகையில் அமைந்துள்ளது இச்சட்டத்திலுள்ள தண்டனைகளாக குற்றப்பணம், உடைமை பறிமுதல், பாதிப்பை ஏற்படுத்தியவருக்குக் கடும்சிறை, எளிய சிறை, மரண தண்டனை என்பன குற்றங்களின் தன்மைக்கேற்ப வரையறுக்கப்பட்டுள்ளன. தண்டனையென்றால் உடல், உள ரீதியான துன்புறுத்தல் அல்லது உயிரிழப்பு அல்லது இழப்புண்டாக்கச் செய்தல் ஆகிய செயல்களைக் குறிக்கும். குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் குற்றவாளியையே அழித்து விடவும், அபராதம், உடைமை பறிமுதல், இழப்பீடு பெற்றுக் கொடுத்தல், சிறை என்பவற்றால் குற்றவாளிக்கு இழப்புண்டாக்கவும் துன்பம் விளைவிக்கவும் முடிகிறது. இவ்வாறு குற்றவாளிகளுக்கு தண்டனை அளிப்பதனால் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களுடைய வாரிசுகள் தமக்கேற்பட்ட துன்பத்தையும் நஷ்டத்தையும் மறந்து பழிவாங்கும் எண்ணமில்லாது அமைதியுடன் சமுதாயத்தில் இயல்பாக வாழ ஏதுவாகின்றது. சமுதாயத்தில் தொடர்ந்து குற்றங்கள் நிகழா வண்ணம் பாதுகாக்கவே தண்டனை வழங்கப்படுகின்றது. தண்டனை அளிக்கப்படவில்லை என்றால், பாதிக்கப்பட்டவர் அல்லது அவருடைய வாரிசுகள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் திருப்பி பாதிப்பை ஏற்படுத்த முயற்சிப்பார்கள். இதனால் பழிவாங்கும் உணர்வு இரு சாராரிடத்திலும் தொடர்ந்து கொண்டிருக்கும். இதனால் சமுதாயம் அமைதி இழந்து எப்பொழுதும் குழப்பத்தில் இருந்துகொண்டே இருக்கும். இவற்றைத் தடுக்கவே சமூகம் வளர்ச்சியடையாத காலத்திலிருந்து இன்றுவரை குற்றத்திற்குரிய தண்டனையை குற்றவாளிக்கு வழங்கி விடுகின்றனர். இதனால் பாதிப்பை ஏற்படுத்தியவரும் பாதிக்கப்பட்டவரும் நேரடியாக மோதிக்கொள்ளவோ இதைப்பற்றிப் பேசவோ கூடாதென்ற கட்டளையும் வழங்கப்பட்டு வந்தது.

ஆரம்பத்தில் தண்டனை என்பது சமுதாயத்தின் தலைவனாலோ, அரசனாலோ வழங்கப்படும் துன்பத்தின் அளவேயாகும் எனக் கணிக்கப்பட்டது. இதே துன்ப அளவைப் பாதிக்கப்பட்டவரோ, அவருடைய வாரிசுகளோ பாதிப்பை ஏற்படுத்தியவருக்கு அளிப்பதை, தண்டனை வழங்கப்பட்டதெனக்கூற முடியாது. ஏனெனில் தண்டனை அதை வழங்க உரித்துடையவர்களால் வழங்கப்பட வேண்டும். முன்பு தலைவனிடம் அல்லது அரசனிடம் இருந்த இவ்வுரிமை இன்று குற்றவியல் நீதிமன்ற நீதியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர் (Accused) குற்றவியல் நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்பட்டு அவர் குற்றவாளி (Guilty) என நீதியாளர் முடிவு செய்தால், குற்றத்திற்குரிய தண்டனையை வழங்கித் தீர்ப்பளிக்கின்றார். தண்டனை வழங்கப்பட்டுவிட்டதென்றால் குற்றவாளிக்கு எவ்வித துன்பமோ பொருள் நட்டமோ தனிமனித சுதந்திரம் பாதிக்கப்படவோ இல்லையென்றால் அத்தீர்ப்பைத் தண்டனை என்று கூற முடியாது. இவ்வாறு தண்டனை வழங்கப்படும்போது குற்றவாளியின் மனநிலை பாதிக்கப்பட்ட[illegible]டைய துயர நிலை என்பவற்றை[illegible]ந்து குற்றத்திற்கு ஏற்ப தண்டனை வழங்கப்படுகின்றது.

இதுவரை குற்றமான செயலைப் புரிந்தவர்களே குற்றவாளிகள் என நோக்கினோம். ஆனால் செய்யாமைக்கு ஒருவர் பொறுப்பாகும் நிலை இன்றுள்ளது. உதாரணமாக 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' பிரிவு 108 இன்படி சட்டமுரணான கூட்டம் அல்லது கலகம் நிகழும் இடத்தின் உரிமையாளரோ, அதில் குடியிருப்பவரோ, அதில் அக்கறை கோருபவரோ அத்தகைய குற்றம் இழைக்கப்படுகிறதென அறிந்து கொண்டு அல்லது இழைக்கப்படக் கூடுமென நம்புவதற் பொருட்டானவராயிருந்து கொண்டு அல்லது இழைக்கப்படக் கூடுமென நம்புவதற் பொருட்டானவராயிருந்து கொண்டு, அது பற்றிய அறிவித்தலை காவல்துறை அலுவலருக்குக் கொடாவிடின் அல்லது தவிர்ப்பதற்கு சட்டப்படியான நடவடிக்கை எடுக்காவிடின் அவர் குற்றக் காசிறுப்பினால் தண்டிக்கப்படுவார் எனக் குறிப்பிடுகிறது. மேலும் பணியாள் செய்யும் குற்றச் செயலினால் பாதிக்கப்பட்டவர், குறித்த பணியாளை வேலைக்கமர்த்திய எஜமானிடமிருந்து பரிகாரம் பெறும் நிலையும் இன்றுள்ளது. இதையே பகரப் பொறுப்பு(Uacarious liability)என்கிறோம். இங்கு எஜமான் நேரடியாக குற்றச் செயலைப் புரியாவிட்டாலும் எஜமானது வேலையைச் செய்வதற்காக அமர்த்தப் பட்டவரான பணியாளால் தீங்கொன்று விளையுமானால் அதற்கு எஜமானரே பொறுப்பேற்க வேண்டும்.

சில வேளைகளில் குற்றமனம், சட்டத்தால் தடுக்கப்பட்ட செயல் (குற்றச்செயல்) இரண்டும் இணைந்திருந்தாலும் தண்டனை அளிக்கப்படுவதில்லை. ஒவ்வொருவருக்கும் தனது உயிர், உடைமை என்பவற்றையும் தன்னைச் சார்ந்தவர்களின் உயிர் உடைமை என்பவற்றையும் பாதுகாத்துக்கொள்வதற்கு உரிமையுள்ளது. இந்த உரிமைக்குத் தான் தற்காப்புரிமை ( Right of Private Defence ) என்று பெயர், 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்- பிரிவு 69 - 79 வரை தற்காப்புரிமை பற்றிக் கூறுகிறது. இவ்வுரிமையைப் பயன்படுத்தும் போது சில சந்தர்ப் [illegible] எதிரி கொல்லப்பட்டாலும் அது [illegible] என்று சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் எட்டு அகவைக்குட்பட்ட குழந்தைகள் எந்தக் குற்றச் செயலைச் செய்தாலும் குற்றமல்ல என தமிழீழ ஒறுப்புச் சட்டம் பிரிவு 57 கூறுகிறது. ஆகவே எட்டு அகவைக்குட்பட்ட குழந்தைகள் குற்றச் செயலைச் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட மாட்டாது. எட்டு அகவைக்கு மேற்பட்டதும் பன்னிரண்டகவைக்குட்பட்டதும் தனது நடத்தையின் தன்மையையும் விளைவினையும் சீர்தூக்கிப் பார்ப்பதற்குப் போதிய விளக்க முதிர்ச்சியடையாத பிள்ளை ஒன்றினால் செய்யப்படுமெதுவும் தவறாகாதென 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' பிரிவு 58கூறுகிறது. ஆகவே இத்தகையோரின் செயலுக்கும் தண்டனை வழங்கப்பட மாட்டாது.

மேலும் குற்ற மனமின்றி குற்றச் செயல் புரிந்தாலோ, குற்றச்செயலின்றி குற்றமனத்தை உடையவராக விளங்கினாலோ அவற்றிற்குத் தண்டனை வழங்கப்பட மாட்டாது. இந்த அடிப்படையில் தான் மனநோயுற்ற ஆளின் ( Insane Person ) செயல் குற்றமென்றாகாது. இது தமிழீழ ஒறுப்புச் சட்டம்- பிரிவு 59- இலுள்ளது. எனவே இவர்களால் செய்யப்படும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படுவதில்லை.

மேலே கூறப்பட்ட பல்வேறு சூழ்நிலைகளில் குற்றவாளிக்கு அளிக்கப்படும் குற்றவிலக்களிப்பு உரிமை ஆகியவற்றை தமிழீழ ஒறுப்புச் சட்டம், மட்டுமல்லாது உலகிலுள்ள எல்லா நாடுகளும் இன்று செயற்படுத்திவருகின்றன.

மேலும் தண்டனை வழங்கப்படும் போது குற்றவாளிகளின் நிலை, வயது என்பனவும் இன்று கருத்திலெடுக்கப்படுகின்றன. உதாரணமாக கருவுற்ற பெண்ணொருவர் குற்றவாளியாகக் காணப்பட்டு அவரால் இழைக்கப்பட்ட குற்றத்திற்கு சாவொறுப்பு வழங்கப்படக் கூடியதாக இருந்தாலும் அவரது கருவுற்ற நிலையை கருத்திலெடுத்து கடுஞ்சிறையொறுப்பையோ எளிய சிறையொறுப்பையோ தான் வழங்கலாம். இது பற்றி தமிழீழ ஒறுப்புச் சட்டம் பிரிவு 47 கூறுகிறது.

16 அகவைகளுக்குட்பட்டவர்களுக்கு எதிரான குற்றமானது சாவொறுப்பிற்குரியதாக இருந்தாலும் அதற்குப் பதிலாக சிறையொறுப்பே வழங்க முடியுமென 'தமிழீழ ஒறுப்புச் சட்டம்' பிரிவு 46 கூறுகிறது. இவ்வாறு தண்டனை வழங்குவது என்பதில் பல வேறுபாடுகளும் முன்னேற்றகரமான வளர்ச்சிப் போக்கும் காணப்படுகின்றது. குற்றச் சட்டமானது காலத்திற்கு ஏற்றவாறு மாற்றப்பட்டு இன்றைய பகுத்தறிவுக்கு ஏற்றவாறு தண்டனைகள் வழங்கப்பட்டும் வருகின்றன.

திருமதி சுகிர்தா டொமினிக்

---



ஆண் :- நான் உங்களைக் காதலிக்கேக்க எவ்வித சீதனமும் வேண்டாம்; நீங்கள் மட்டும் கிடைச்சா போதுமெண்டு தான் சொன்னான். இப்ப வந்து.........

பெண் :- இப்ப வந்து ?

ஆண் :- எங்க அம்மா சீதனம் வாங்காமல் உன்னைக் கட்டிக்க வேண்டாம் என்றும் சொல்றாங்க.

பெண் :- பரவாயில்லங்க விரைவில் தமிழீழத்தில் சீதனத்தடைச் சட்டம் வந்துடும், அதுக்கப்புறமா நம்மட திருமணத்தை வச்சுக்கலாம்.

---

*மேலே உயர உயரப் போக வேண்டும் என்றால் உங்கள் சொந்தக் கால்களையே உபயோகப்படுத்துங்கள். மேலே தூக்கிச் செல்ல விடாதீர்கள்.*

— சிந்தனையாளர் நியெட்ஸே —

*இந்த உலகில் மனித வர்க்கம் பெற்றுள்ள உரிமைகள் எல்லாவற்றிலும் உன்னதமானவை வலிமையின் மூலம் பெறப்பட்ட உரிமையே.*

— சிந்தனையாளர் நியெட்ஸே —

## நீதி செலுத்துகையில் முதன்மை வகிக்கும் நடுவு நிலைமை

எந்தவொரு நாட்டிலும் நீதி செலுத்துகின்ற நிலையில் உள்ளவர்கள் நடுவு நிலைமை என்னும் நிலைப் பாட்டைக் கைக்கொள்ள மறந்திருக்க மாட்டார்கள். உண்மையில் நடுவு நிலைமை என்பது பக்கஞ் சாராமையே ஆகும் இது இயற்கை நீதிக் கோட்பாட்டின் படியும் வலியுறுத்தப் படுவதோடு அந்த அந்த நாடுகளின் சட்டங்களாலும் மேலும் வலியுறுத்தப் படுகின்றது. நடுவுநிலைமையின் அடிப்படையில் நீதி செலுத்துதலின் முதன்மைப் பங்கு வகிக்கும் நீதியாளர்கள் இவ் விதியின் அடிப்படையில் மிகவும் அவதானமாக தமது நீதியைச் செலுத்துகின்றனர். இத்தகைய ஒரு நடுவுநிலைமை முற்றும் அறிந்த ஒருவர்க்கோ அல்லது வெறுமையான தூய மனவலிமை மிக்க ஒருவருக்கோ இயல்பாகவே ஏற்படுகின்றது என்பது மறுக்கப்பட முடியாத ஒரு வெளிப்படை உண்மை.

அனேகமான நாடுகளில் மக்கள் செலுத்தப்படும் நீதிமுறைச் செயற்பாடுகள் பக்கம் சாராமலும் தன் விருப்புக்கு இடம் கொடுக்காமலும் செயற்படுத்தப் படும் போதே அத்தகைய செயற்பாடுகள் வெற்றிப் பாதையில் நடை போடுகின்றன. சில நாடுகளின் நீதிமுறைச் செயற் பாடுகளை நோக்கும் போது அவற்றில் சில வெற்றி நடை போடுவனவாயும் சில பின்னடைவான நிலைமைகளைஉடையனவாயும் காணப்படுவதை அவதானிக்கலாம். இவ்வாறு வேறுபட்ட நிலைகள் காணப்படுவதற்கு பல்வேறு காரணிகள் ஏதுவாயிருந்த பொழுதும் நடுவு நிலையும் இவற்றில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு காரணியாக உள்ளது. என்பதை அத் துறை சார்ந்த அக்கறையுடையோர் கண்ணுறாமல் இருக்க முடியாது. அனேகமானோர் வழுவா நீதி என்றும் சிறப்பான நீதி என்றும் பேசக் கேட்டிருக்கின்றோம். அவற்றின் இரகசியம் என்னவென்று துருவிப்பார்த்தால் அது நடுவுநிலைமையே என்பது புலனாகும்.

நீதி பரிபாலனத்திலும் சரி, ஏனைய மத்திய நிலை வகிக்க வேண்டிய பணிகளிலும் சரி நடுவுநிலைமை பெரியளவில் பங்கு கொள்கிறது. நடுவு நிலைமை பின்னடையும் போது அங்கே குறித்த இலக்கு ஊனமுறுவதைக் காணலாம். இதுவே இன்று அனேக நாடுகளின் நீதி செம்மையாக இடம் பெறாமைக்கு காரணமாக உள்ளது. இப்பக்கஞ்சார்தல் அல்லது நடுவு நிலையால் பிறழ்தல் என்பன, பல அரசியல் காரணங்களாலும் ஏனைய சமூகக் காரணங்களாலுமே இடம் பெறுகின்றன. ஆனாலும் அநேக நாடுகளில் அரசியல் காரணிகளின் பாதிப்பினாலேயே நடுவுநிலைமை பெரிதும் பாதிப்படைகின்றது.

ஆனால் அனேகமாக இங்கிலாந்து, இத்தாலி, சுவிஸ்சலாந்து, அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளில் காணப்படும் நீதி முறைகள் நடுவுநிலையின் அடிப்படையில் செயற்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர். அவ்வாறு வழங்கப்படும் நீதி நடுவு நிலைமையுடையதாக அமைகின்றதா என்பதை மக்கள் எந்தளவிற்கு அத்தீர்ப்பில் நிறைவடைகின்றார்கள் என்பதில் இருந்து அவதானிக்கலாம் அதாவது நீதி செலுத்தப்படுகைக்கு ஆளாகும் மக்கள், தமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை அல்லது முடிவினை மனமார ஏற்றுக்கொள்வதை நோக்கும் போது இது புலப்படும். வழங்கப்பட்ட அல்லது செலுத்தப்பட்ட நீதியில் மக்கள் திருப்தியுடையவர்களாயிருப்பின் அவர்களது மேன்முறையீடுகளது எண்ணிக்கையின் விகிம் உயர்வாகக் காணப்படும் என்பதை யாரும்

மறுதலிக்க முடியாததாகும்.

இந்த வகையில் நோக்கும் போது, சில காலங்களுக்கு முன்பு தமிழீழப் பகுதியில் நடைமுறையிலிருந்த ஸ்ரீலங்காவின் நீதிபரிபாலனம் நடுவுநிலைமையில் தவறிய பரிபாலன முறையாயும், மேன்முறையீடுகளினை அதிகமாக உடைய நீதியாவும் காணப்பட்டுள்ளது. இங்கே நீதி செலுத்தியோர் முதிர்ந்த அனுபவமுடையவர்களாக இருந்த போதிலும், போதியளவு நடுவுநிலைமை பேணப்படுகின்றது என்பதனை உறுதி செய்ய முடியாது காணப்பட்டமையும், அதனால் ஒதுக்குப்புறமாக இவை செல்ல வேண்டி இருந்தமையும் வரலாற்றைத் திருப்பிப் பார்ப்பவர்களால் இனம் காண முடியும். அத்துடன் இம் மன்றுகளின் அலுவலகங்களும் நடுவு நிலைமையில் நின்று நீதிபதிகளோடு ஒத்துழைக்காமையும் ஓர் அம்சமாமாகும். அது தவிர பல பிற்போக்குகளான சட்ட ஏற்பாடுகளும் முனைப்போடு ஓடும் கால ஓட்டத்தோடு நீதியை இசைந்து போக முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கின.

இதே போலல்லாமல் நடுவுநிலைமையைப் பெரிதும் பேணுகின்றதும் முற்போக்கான சட்ட ஏற்பாடுகளை உடையதுமான இத்தாலிய நீதிபரிபாலனம் கடந்தஆறு மாதங்களுக்கு முற்பட்ட காலங்களில் மொத்தத் தீர்ப்புக்களில் 3வீதமானவற்றையே மேன்முறையீடுகளாகச் சந்தித்தது என்பது வியத்தகு ஓர் உண்மையாகும். ஆனால் அதன் அண்டைய நாடான பிரான்சில் அதே காலத்தில் மேன்முறையீடுகளின் வீதம் 25 ஆகக் காணப்படுவது ஓர் அதிசயமான விடயமே. மேலும் பல நாடுகளில் வேறுபட்ட வகையில் நீதி செலுத்தப்படுவதோடு, வேறுபட்ட வீத அளவினதான மேன்முறையீடுகளையும் அவை கொண்டுள்ளன. ஆனால் இன்று தமிழீழப் பகுதியில் இடம் பெறும் நீதிபரிபாலன முறையானது, அனைத்துலகத்தவரையும் வியப்பிலாழ்த்தத் தக்கவாறான புள்ளி விபரங்களை வெளிக்காட்டி நிற்கின்றது. அதாவது இதுவரை காலமும் தீர்ப்பு வழங்கப்பட்ட மொத்த வழக்குகளில் 3 வீதமான வழக்குகளே மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளன. இதனைப் பார்க்கையில் ஒரு நாட்டின் செம்மையான நீதி செலுத்துவதற்கு வயது முதிர்ச்சி அவசியமானது என்பது ஒருபுறமிருக்க, இளவயதினராலும் ஏற்புடைய நீதியைச் செலுத்த முடியும் என்பதும் புலனாகின்றது. சில வேளைகளில் எல்லா இளையோராலும் இவ்வாறு செயற்படுவது கேள்விக்கிடமான ஒன்றாக இருக்கலாம். ஆனால் மன உரம் கொண்ட நடுவு நிலையினால் வழுவாத, விடுதலையே குறிக்கோளாய் உடைய தேவையான சட்டக்கல்வி பயின்ற விடுதலைப் புலிப் போராளிகளால் இத்தகைய முதிர்வான நீதிசெலுத்துதல் சாத்தியமானதென்று அதன் புள்ளிவிபரங்கள் எடுத்து இயம்புகின்றன.

அதனுடன் நீதி செலுத்துகையில் சட்டத்தரணிகளும் கணிசமான பங்கு வகிக்கின்றனர். அத்தகையோரும் இவ்வாறான இளையோரின் நீதி செலுத்துகையினால் நிறைவு பெற்று தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்ற மனநிலையுடன் செயற்படுகையில் நீதி மேலும் இலகுவாகின்றதோடு விரைவானதாயும், செவ்வையானதாயும் அமைய வழியும் செய்கின்றது.

ஒட்டு மொத்தத்தில் உண்மை நீதி செலுத்துவதற்கு வயது ஓர் இடையூறல்ல என்பதும், ஏற்புடைய நடுவுநிலைமையே நீதியின் பெரும்பங்கைத் தீர்மானிக்கின்றது என்பதனையும் மேற்கண்ட விளைவுகளைச் சரியாக நோக்கும் எவராலும் அடையாளம் காணாமல் இருக்க முடியாது.

— ந. மதிவர்மன்

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY.

# விடயம்

1990ஆம் ஆண்டு தை மாதம் 20ஆம் திகதி நகுலன் கிராமம், கச்சாய் றோட், சாவகச்சேரியைச் சேர்ந்த தில்லையம்பலம் சற்குணம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கலா என்பவரை பெரியோர்களின் நிச்சயப்படுத்தல் மூலம் திருமணம் முடித்தார். இத் திருமணத்தின் போது பெண் வீட்டார் தமது சார்பில் சீதனமாக 50,000/- ரூபா பணமும், 10 பவுண் நிறையுள்ள நகைகளும் கொடுத்தனர். சற்குணம் கலா ஆகியோரின் குடும்ப வாழ்வின் காரணமாக இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். வினோதன் வயது 04. சாந்தி வயது 02 ஆகும். சற்குணத்திற்கு நிரந்தரமான தொழில் இல்லை. அத்தோடு அவர் அதற்கான முயற்சிகளையும் எடுக்கவில்லை. அத்தோடு தினமும் கிடைக்கும் பணத்தில் நன்றாகக் குடித்து விட்டு வீட்டிற்கு வந்து மனைவிக்கு ஒரே அடி ஆக்கினை. சீதனம் காணாது என்றும், உனது தாய் வீட்டிற்குச் சென்று காசு வாங்கிவா என்றும் கூறி ஒரே சண்டைதான். கலாவின் வீட்டார் கொடுத்த பணம், நகைகளையும் சற்குணம் தனது குடி வெறிக்கு முழுவதையும் செலவழித்து விட்டார். குடும்பத்தில் வறுமையும் கஷ்டமும் தாண்டவமாடத் தொடங்கி விட்டது. ஆனால் சற்குணம் தனது மனைவி பிள்ளைகளை உழைத்துப் பராமரிக்க வேண்டும் என்று எண்ணவில்லை. மாறாக குடித்து விட்டு மனைவிக்கு ஒரே அடிதான். கலா தன்னையும் தனது பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்கு கூலி வேலைக்குப் போய் வரும் வருமானத்தில் வாழத் தொடங்கினாள். ஆனால் சற்குணம் கலாவின் உழைப்பையும் கேட்டு ஒரே துன்புறுத்தல். எனவே கலாவினால் தொடர்ந்து சற்குணத்துடன் நிம்மதியாக வாழ முடியாது. எனவே சற்குணத்திடமிருந்து விவாகரத்தைப் பெற்று விட்டு, தனது பிள்ளைகளுடன் தான் நிம்மதியாக உழைத்து வாழலாம் என்ற முடிவிற்கு கலா வருகின்றாள்.

**கேள்வி:-** சற்குணம் கலா என்பவர், தமிழீழ மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரியில் தில்லையம்பலம் - சற்குணத்திற்கு எதிராக விவாகரத்து வழக்கொன்றைத் தாக்கல் செய்வதற்கு வழக்கு அறிக்கை எப்படித் தயாரிப்பது?

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி

தன்மை - மணநீக்கம்

சற்குணம் - கலா
நகுலன் கிராமம்,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
- வழக்காளி

எதிர்

தில்லையம்பலம் - சற்குணம்
நகுலன் கிராமம்,
கச்சாய் றோட்,
சாவகச்சேரி.
எதிராளி.

இந்த 1995ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ஆம் திகதி வழக்காளியின் பிராதை அவர் சட்டவாளர் செல்வி. சி. கண்ணகி மூலம் வெளிப்படுத்துவதாவது.

01. வழக்காளி வசிப்பதும் வழக்கெழு காரணம் எழுந்ததும் இந் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள்ளேயாகும்.

02. 1995ஆம் ஆண்டு தை மாதம், 20ஆம் திகதி பெரியோர்களின் நிச்சயப்படுத்தல் மூலம் வழக்காளிக்கும் எதிராளிக்கும் சமயாசார முறைப்படி திருமணம் நடைபெற்றது.

03. இத் திருமணத்தின்போது வழக்காளியின் பெற்றோரினால் எதிராளிக்குச் சீதனமாக ரூபா 50,000/- பணமும் 10 பவுண் நிறையுள்ள நகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

04. வழக்காளி - எதிராளி இருவரின் குடும்ப வாழ்வினால் இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு முறையே ஆண் - 01.04 வயது; பெண் 01; வயது 02 ஆகும்.

05. எதிராளி வழக்காளியை திருமணம் முடித்த சிறிது காலத்தின் பின்பு குடித்து வெறிக்கத் தொடங்கி விட்டார். தினமும் குடித்துவிட்டு வந்து வழக்காளியை அடித்துத் துன்புறுத்தி சீதனம் போதாது என்றும், வழக்காளியை அவரது தாய் வீட்டில் சென்று பணம் வாங்கி வரும்படியும் கூறி அடிப்பார். இது தினசரி நிகழ்வாக மாறிவிட்டது.

06. வழக்காளியின் பெற்றோரால் எதிராளிக்குக் கொடுத்த சீதனப் பணத்தையும், மற்றும் நகைகளையும் எதிராளி விற்று அவற்றையும் குடித்து வெறித்து தினமும் வழக்காளிக்கு அடி ஆக்கினைதான்.

07. எதிராளி இடையிடையே கூலி வேலைக்குச் சென்று உழைத்து விட்டு அதில் வரும் வருமானத்தையும் எடுத்து குடித்து வெறித்தார். வழக்காளியையோ பிள்ளைகளையோ எதிராளி எந்த விதத்திலும் பராமரிக்கவில்லை என்பது.

08. வழக்காளி கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் வருமானத்தை எடுத்து தன்னையும் பிள்ளைகளையும் பட்டினியிலிருந்து காப்பாற்றி வருகின்றார். ஆனால் எதிராளி - வழக்காளி கூலி வேலைக்குச் சென்று உழைக்கும் பணத்தை தனக்குத் தரச்சொல்லி தினமும் சண்டை பிடிப்பார்.

09. எனவே, வழக்காளிக்கு எதிராளியுடன் சேர்ந்து வாழ முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே வழக்காளி விவாகரத்து வழக்கு ஒன்றை இம் மன்றில் தாக்கல் செல்வதற்கு வழக்கெழு காரணம் ஒன்று எழுந்துள்ளது.

கோரிக்கைகள்:-

01. வழக்காளிக்கும் - எதிராளிக்கும் இடையில் உள்ள திருமண உறவை நீக்கி கொள்வதற்கு நீதிமன்றம் ஒரு கட்டளையை எதிராளிக்கு எதிராக வழங்கும்படியும்,

02. வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையில் உள்ள திருமணத்தின் விளைவாக பிறந்த இரண்டு பிள்ளைகளையும் வழக்காளி தன்னுடன் வைத்திருப்பதற்கும் அத்தோடு மன்று எதிராளியிடமிருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு ஒரு குறித்த தொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வழக்காளி சார்பில் ஒரு கட்டளையும்,

03. திருமணத்தின்போது வழக்காளியின் பெற்றோரால் எதிராளிக்குச் சீதனமாக வழங்கிய ரூபா 50,000/- பணத்தையும் 10 பவுண் நிறை உள்ள நகைகளையும் வழக்காளியிடம் வழங்கும்படி எதிராளிக்கு எதிராக ஒரு கட்டளையும்,

04. எதிராளி மேற்படி தனது இரண்டு பிள்ளைகளின் பெயரிலும் ஒரு லட்சம் ரூபா பணத்தை நிரந்தர வைப்பில் இடும்படி மன்று எதிராளிக்கு எதிராக ஒரு கட்டளையும்,

05' வழக்காளிக்கு இவ் வழக்கில் ஏற்பட்ட வழக்குச் செலவை எதிராளியிடம் இருந்து மன்று பெற்றுத்தருவதற்கு ஒரு கட்டளையும்,

06. நீதிமன்றம் நியாயமெனக் கருதும் பிற நிவாரணங்களும்.

வழக்காளியின் கையொப்பம்

திகதி:- வழக்காளியின் சட்டவாளர்

இரா. இசையரசன்

---

*நேர்மையானவர்களாக நடிப்பதை விட நேர்மையாக இருப்பவர்களையே நான் விரும்புகின்றேன்.*

தேசியத் தலைவர்

திரு. வே. பிரபாகரன்

---


# இந்திரன் நகை மாடம்

தங்கப்பவுண் நகை வியாபாரம்

22 கரட் தங்க நகைகள்

ஓடருக்கு உத்தரவாதத்துடன்

செய்து கொடுக்கப்படும்



☎ 237

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்

இல. 10, சிறப்பு அங்காடி

சாவகச்சேரி.

# புலி இங்கெழுதும் சட்டம்தான் இனி!

உண்மை நீதி அமைதி சமத்துவம்
கண்ணியம் காப்பு, சட்டத்தின் யாப்பு
உலகப் பந்தின் உள திசை யாவிலும்
நிலவும் சட்ட உடம்பின் நரம்புகள்
தசையொடு குருதி எலும்பொடு தோலும்
இதயம் என்பதும் மேலுள்ள வகையே
ஆனால்! இலங்காத் தீவிற் சிங்கள
''மூனா'' அரசுகள் இயற்றி உள்ள
சட்டம் மட்டும் வேறு வகையது
மட்டம் தட்டித் தமிழரை அழிப்பது
படையினர் கண்முன் காணும் தமிழரைத்
தடையின்றிச் சுடலாம்! தலை அரிந்திடலாம்!
அள்ளிச் செல்லும் விமானக் குண்டுகள்
பள்ளிக்கூடம் கோவில் வீடுகள்
வைத்தியசாலை சந்தை கடைத்தெரு
பைத்தியம் போலெவ் விடத்தும் வீசலாம்.
தயங்கிடாமல் இறந்த அப்பாவிகளை
பயங்கரவாதிகள் எனப் பறைசாற்றலாம்
ஆலயம் நூலகம் அனைத்தும் எரிக்கலாம்.
பாலகர்பெண்டிர் முதியோரை வதைக்கலாம்
சோலை வயல்கள் சுடுகாடாக்கலாம்
சேலை உரிந்து பெண் மானம் பறிக்கலாம்
தமிழர் உழைப்பைச் சிங்களவர் உண்ணலாம்
தன்மனப் போக்கில் தடைபல விதிக்கலாம்
புத்தரின் போதனைச் சுத்தமும் மாற்றலாம்
யுத்தமே தர்மமென பிக்குகள் சாற்றலாம்
பேச்சு வார்த்தை பேசி ஏமாற்றலாம்
''ஆச்சி அம்மா'' அறளைத்தனமெல்லாம்
வேதம் நீதி என்று நாம் ஏற்றுமே
பாதி வாழ்க்கை வாழ்வதே சட்டமாம்!
பெருமை மிக்க இவ்வகை ஆட்சியும்
அருமை மிக்க சட்டத்தின் மாட்சியும்
எங்கேனும் வையத்தில் உண்டோ ? இல்லை— புலி
இங்கெழுதும் சட்டம்தான் இனி.

— நிலா தமிழின்தாசன் —

# முறைமை பிறழா நீதி

ஒரு சமுதாய நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் குடிமகன் ஒருவரி னதோ, ஒரு கூட்டத்தாரினதோ செய்கைகள், நடவடிக்கைகள் அனைத்துமே அவரவர் நலனை அடிப்படையாகக் கொண்டே செயற் படுகின்றது. ஆனால் அவ்வாறு செய்யப்படும் நடவடிக்கைகள் அவ ரவர்களினது, சொந்த நலனை அடிப்படையாகக் கொண்டே செயற் படுகின்றது. அவ்வாறு செய்யப்படும் நடவடிக்கைகள் அதே சமு தாய நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் இன்னொருவரினதோ, அந்த ஒருவன் சார்ந்த கூட்டத்தினையோ, வேறு ஒரு குழுவையோ, சமூகத் தையோ பாதிக்காத வகையில் அந் நபரது செயல் இருக்க வேண் டும் என்று அந்த அரசு மட்டுமல்ல, பொதுவாக உலக நாடுகளில் உள்ள அரசாங்கங்களின் பொதுக் கருத்தும் ஆகும்.

உதாரணமாக, சிவன் என்பவர் குறிப் பிட்ட ஒரு தொழிலில் சாணக்கியம் பெறும் நோக்குடன் முனைந்து ஈடுபடுகின்றார். அதற்காக சிவராஜ் என்னும் இன்னுமொரு வர் தன்னிடமுள்ள மூலப் பொருள்களை சிவனுக்கு வாரி இறைத்துக்கொண்டிருக் கின்றார். இருவரும் தங்கள் சொந்த நலத் தையே கருத்திற்கொண்டு அதற்காக ஈடு படுகின்றார்கள். சிவன் தான் செய்யும் தொழிலாலோ, சிவராஜ் செய்யும் மூலப் பொருள்களாலோ, இன்னும் மொருவரு க்கோ, குழுவிற்கோ, சமூகத்திற்கோ பாதி ப்பை ஏற்படுத்திக் காட்டாது என்பதையே அவ்விதி குறிப்பிடுகின்றது. இன்று எமது தமிழீழத்தில் ஒருவரது உடைமையை இன் னுமொருவர் கையகப்படுத்துவதும், ஒருவ ரது ஆதனத்தை இன்னொருவர் ஆட்சியில் வைத்திருப்பதும், ஒருவரிடம் வாங்கிய பண த்தை சொல்லப்பட்ட காலத்தில் கொடுக்க மறுப்பதும், பகைமை உணர்வில் தாக்கு தல், புண் விளைவித்தல், கொலை செய் தல் போன்ற எண்ணிக்கையால் குறிப்பிட முடியாத எத்தனையோ தவறுகள் இழைக் கப்படுவதை நாம் காணக் கூடியதாகவும் பத்திரிகைகள் மூலமாக அறியக் கூடிய தாகவுமுள்ளது.

ஆதி காலத்தில் மனித நாகரிகம் வள ர்ச்சியடையாத கால கட்டத்தில் பலமே ஒரு மனிதனின் நலத்தை கருத்திற் கொண்ட வாழ்க்கையாக அமைந்தது. பலம் பொருந்தியவர் தன்னையும் தன்னு டைய பொருளையும் மற்றவர்களிடமி ருந்து பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. அவ்வாறாயின் பலம் நலிந்தவர்களின் நலன் எவ்வாறு பேணப்படும் என்றொரு கேள்வி எழுகின்றது. நலிவடைந்தவர்கள் பலம் பொருந்தியவர்களுக்கு அடிமைகள் என்ற நிலையே அப்போது இருந்தது. சுருங்கச் சொல்லின் ஆயுதம் ஏந்தியவனுக்கே வெற்றி என்ற வாழ்க்கையே நிலவி வந்தது

மனித நாகரிகம் வளர்ச்சியடைந்த பிற்பாடு குழுக்கள் வர்க்கங்களாகி, வர்க் கங்கள் சமூகங்களாகி, சமூகங்களிலிருந்து ஆட்சி முறைகளும் தோற்றம் பெ[illegible] அரசுகளும் நிறுவப்பட்டு, ம[illegible]தன் நாகரிகத்தில் பரிணாம வளர்ச்சியைத்

தொட்டுவிட்டான். இப்போது தனது சொந்த வலிமையில் வாழ்ந்து வந்த மனிதன் சமுதாயத்தில் கூட்டு வலிமையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனி வலிமையைப் பிரயோகிக்க முனைந்தால் சமுதாயம் சீர் கெட்டுவிடும் என்ற நிலையை உணர்ந்து கொண்டு ஆட்சித் தலைவர்கள் ஒரு முறைவழியான ஆட்சி நாட்டில் நடைபெற வேண்டும் எனின் தனி ஆள் வலிமையை தடை செய்து, மக்கள் நலன்களில் அரசே நேரடியாகத் தலையிட்டு அவர்களது பிணக்குகளுக்கு நடுநிலைமையிலிருந்து விளங்கித் தீர்த்து வைக்கும் பாரிய பொறுப்பு அந்த அரசைச் சார்ந்தது என்று கருதியது. இதனாலேயே பல்வேறு நீதிச் சபைகள், நீதிமன்றங்கள் என்பனவெல்லாம் அரசால் நிறுவப்பட்டன.

நாகரிகம் வளர்ச்சியடைந்து செல்லும் வேகத்தில், மக்களின் பிரச்சனைகளும் வளர்ந்து கொண்டே செல்கின்றது இதனால் மக்களும் தங்கள் பிரச்சனைகளுக்குரிய பரிகாரத்தைத் தேடுவதற்கு நோய்வந்தால் மருந்துக்கு வைத்தியனை நாடுவது போல, அரசால் நிறுவப்பட்ட நீதிக் குழுக்கள், சபைகள், நீதி மன்றுகள், என்பவற்றை நாடிச்செல்லத் தொடங்கினர். இவ்வாறான சிறிய நீதி செலுத்தும் குழுக்களாக எமது தமிழீழத்திலும் பல நீதிக் குழுக்கள் இருந்தன. வளர்ந்து வரும் நாடுகளில் பரிணாம வளர்ச்சியில் தமிழீழத் தமிழர்களாகிய நாமும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. நீதி முறையிலும் முறைபிறழா ஆட்சி முறையிலும் தேசியத் தலைவர் வாள் போன்றே செயற்பட்டார் என்பதற்கு ஆரம்பத்திலிருந்தே பற்றற்ற விருப்பு வெறுப்பற்ற தனிநலன் கருதாத இயக்க உறுப்பினர்கள் மூலம், நீதிமுறை செலுத்தப்பட்டு பின்பு நீதிக் குழுக்களாகவும், இணக்க மன்றுகள் மூலமாகவும் மக்களின் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டது. இப்படியாக எமது செயற்பாடுகள் படிப்படியாக வளர்ச்சியடைந்து நீதிமன்றங்கள் மூலம் மக்களின் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டு, தமிழீழ தனியரசை நோக்கி முன்னேறுகின்றன.

இப்போது மாலாவின் ஆதனத்தைக் கலா வலிந்து ஆட்சியில் வைத்திருக்கின்றார் என்றால், அதற்காக மாலா துணிந்து சென்று நீதி மன்றத்தில் வழக்கிடுகின்றாள். ராமுவால் ரஞ்சனுக்குத் தலையில் அடிக்கப்பட்டு பாதிப்புக்கு உள்ளானால், அதற்காக ரஞ்சன் காவல்துறை சென்று அதுவும் நீதி மன்றத்தில் வழக்காக கோப்பிடப்பட்டு, நீதிமன்றங்களில் முறையாக விளங்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படுகின்றது. இவ்வாறு நீதி செலுத்தும்போது நீதி மன்றானது தன்முன் உள்ள சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தும் போது பாதிக்கப்பட்ட கட்சிக்காரன் ஒருபுறம் மனம் குளிர்கின்றான்.

எமது நாட்டில் வாழும் அனைத்து மக்களும் தங்கள் தனி நலனைப் பேணும் அதே வேளை, பொது நலனும் பாதிப்படையாது இருக்க வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் பொது நலனுக்கு இயைந்த வகையில் தன் நலத்தைப் பேண வேண்டும் என்பதே நீதி வழங்குதலின் அடிப்படை நோக்கம் ஆகும். இவ்வகை நலன்களை ஒரு வரையறைக்குள் வைத்துக் கொண்டு இப்படித்தான் வாழ வேண்டும்; இப்படித்தான் செய்ய வேண்டும், இப்படிச் செய்தால் குற்றம்; இது சரி, இது பிழை என்று வரையறை செய்து அதை இலகுவில் மக்கள் அறிந்து கொள்ளவே அரசுகள் பொதுவான சட்டங்களை மக்கள் அறிந்து கொள்ளும் விதமாக இயற்றுகின்றன. மக்கள் தனி நலனையும் பொது நலனையும் பேணும் விதத்தில் எவ்வாறு நடந்து கொள்வது என்று ஐயப்படாமல் இருப்பதற்கே, அரசுகள் சட்டம் என்னும் பெயரில் காலத்திற்குக்காலம் பலவாறான சட்டப் புத்தகங்களை வெளியிடுகின்றன. இந்த வகையில் எமது தமிழீழமும் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஒப்புதலுடன் எமது சமூக அமைப்புக்கு ஏற்ற வகையில், தமிழ் பேசும் மக்களும் விளங்கிக்கொள்ளும் விதமாக சட்டப் புத்தகங்களை காலத்திற்குக் காலம் வெளியிடுகின்றது. எனவே பொது நலனுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத வாழ்வே நிறைவான வாழ்வாக அமைகின்றது. முறை செய்யும் அதி

காரம் எந்த விதத்திலும் தனிமனிதனை அல்லது தனிக் குழுவைச் சாராது என்பதை, சட்டம் திட்டவட்டமாக வலியுறுத்துகின்றது. எப்போதும் முறைசெய்யும் அதிகாரம் அரசையே சார்ந்தது. ஒரு அரசு முறைமை செலுத்தத் தவறும்போது அந்த நாடு ஊழல் நிறைந்த கழிவுக் கிடங்காக ஆகிவிடும். எதிரியிடமிருந்து நாட்டைக் காப்பது, மக்களுக்குரிய சரியான நீதி வழங்குவது ஆட்சி முறைக்கான பண்பாடாகும். தேசியத் தலைவரின் காலத்தில் நீதி செலுத்தல் பாரபட்சமாக, பக்கச்சார்பாக அமையக் கூடாது என்பதற்காகவே மக்களால் எப்போதும் விரும்பப்படும் போராளிகளை எமது தலைவர் நீதியாளர்களாகவும், சட்டவாளர்களாகவும் உருவாக்கினார். இவர்களின் பந்தபாச, விருப்பு வெறுப்பற்ற, பற்றற்ற, பக்கச்சார்பற்ற நீதிமுறை எமது மக்களைத் திருப்திப்படுத்துகின்றது.

— அழ. இனியவன் —

## சிந்தனைக்குச் சில வரிகள்

○ மனிதர்களே உங்கள் உள்ளம் நல்ல தன்மைகளைக் கொண்டிருக்குமானால், மக்கள் உங்களை உயர்ந்த உள்ளம் படைத்தவர்கள் எனப் போற்றுவார்கள்.

○ எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் கொண்டவனுக்கு உதவி புரிவதைத் தடுக்க வேண்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவனுக்கு நாம் நிறைய உதவி செய்ய வேண்டும். அப்போது தான் உன்னதமான சமூகத்தை வளர்க்கலாம்.

○ சுயநலத்தையே எப்போதும் கருத்தில் கொண்டிருப்பவர்கள் இறுதியில் காணப்போவது துன்பங்களும், துயரங்களும், வேதனைகளும் தான், எனவே மனிதர்களாகிய எல்லோரும் பிறர் நலத்தைக் கருத்திற் கொண்டு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

○ இவ்வுலகில் நிலையானது எதுவும் இல்லை. ஆனால் ஒருவனால் ஈட்டப்படும் புகழ்மட்டும் யார் அழித்தாலும் அழியாது.

○ உலகக் கண்கள் கட்டப்பட்ட நிலையில் உள்ளது எனக் குற்றம் புரியும் மக்கள் கண்களை விழிக்கும் போது சட்டத்திற்கு முன் நிற்கின்றார்கள்.

○ சட்ட திட்டங்கள் பலது. ஆனால் அது காட்டிச் செல்லும் பாதை ஒன்று.

இந்து சமுத்திர முத்தாம்
இலங்கை மண்ணில்
வந்து
முந்து குடிகளைத் - தமக்கு
முத்திரை குத்திக்கொண்டு
முன்னேற்ற வாழ்வுக்கென
தீவிரத் திட்டங்கள் தீட்டியவர்களும்
எங்கும் கட்டம் கட்டமாய்
காலடி வைத்தவர்களும்
பல சட்டங்கள் போட்டார்.

ஈழக்கடல் தனில்
பாலம் போட்டு
ஏலம் கறுவா
ஏற்றிச் சென்ற
ஒல்லாந்தர் தொகுத்தது
தேசவழமைச் சட்டம்.
கூடவே அவர்களிட்டது
றோமன் டச்சு சட்டம்.

எங்கள் இனத்தவரை வருத்தி
பருத்தியும் பல்சுவைப் பானங்களாம்
கொக்கோ கோப்பியும்
றப்பர் தேயிலையும் புகையிலையும்
பயிரிட்டு - அளவில்
ஓங்கு செல்வம் சேர்த்த
ஆங்கிலேயர்
பொறித்து வைத்தது
பொதுச்சட்டம்.

தார்மீகம் தனதாட்சியில்
தழைக்குமெனத்
தம்பட்டம் அடித்துக்கொண்டு
அதிகாரக் கதிரைகளை
இளக விடாது
இறுகப் பிடித்திருக்கும்
இலங்கையின் அரசியல் வாதிகள்
வடிவமைத்தவை என
முப்பது சட்டங்கள்.

○
○
○

# பலமே சட்டத்தின் திறவுகோல்

வந்தேறு குடிகளாய்
இலங்கையரைப்
பந்தாட முனைந்த இவர்கள்எல்லாம்
தமது பலத்தினால்
வகுத்தமைத்த இச் சட்டங்கள்
வகுப்பு வாதத்தையும்
மனித
வாழ்க்கைக்குப் பொருத்தமற்ற
சாக்கடைச் சாதியத்தையும்
அநீதியையும் அராஜகத்தையும்
அப்பட்டமாய்த் தம்முள் கொண்டு
அடக்கு முறையினுக்கு
ஆணிவேர் அமைத்தவை.

கன்றையிழந்து
கதறியழுத ஆறறிவற்ற
ஆவிற்காய் - தன்
ஒற்றை மகனை உடனேயே
தேர்க்காலுக்குத்
தீனியாக்கிய
தேவன்
மனுநீதிச் சோழனின்
நெறி தவறா வழியில்
வெறி கொண்டு
வீரமுடன் நடக்கும் - எங்கள்
விடுதலை வேந்தனாம்
வேலுப்பிள்ளை பிரபாகரனால்
விடுக்கப்பட்ட
இல்லை இல்லை எங்களுக்குக்
கொடுக்கப்பட்ட
தன்னிகரில்லாத்
தமிழீழச் சட்டங்களில்

சாதியமில்லை
சமயவாதமில்லை
அநீதியில்லை
அடக்குமுறையில்லை
அராஜகமில்லை
அர்த்தமற்ற உளறல்களில்லை.

வல்லோர்
நல்லோர்
எல்லோருக்கும் ஒரு நீதி
பெரியோர் சிறியோர்
வலியோர் மெலியோர்
என்ற
பேதமற்ற சமத்துவம்
உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும்
இடமளிக்கப்படாத
ஏற்றமிகு சட்டங்களிவை.

ஓ ! தமிழினமே !
பலம் என்னும் திறவுகோலால் தான்
சட்டமென்னும்
கதவினைத் திறந்து கொள்ள முடியும்
என்ற
எங்கள்
கொற்றவனின்
கொள்கைதனைக்
கொடி பிடித்து வரவேற்போம்
அவன்
கொள்கைதனில்
கால் பதித்து நலமுறுவோம்.

— க. சீராளன் —

---

## சிந்தனையாளர் நியெட்ஸே

ஒருவன் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்க வேண்டும்.

நீ போதிக்க விரும்புகின்ற உண்மை ஞானம் எவ்வளவுக்கெவ்வளவு அதீதமானதோ, அவ்வளவுக்கவ்வளவு அதை நோக்கிப் புலன்களை நீ மயக்கி இழுக்க வேண்டும்.

இந்த உலகில் மனித வர்க்கம் பெற்றுள்ள உரிமைகள் எல்லாவற்றிலும் உன்னதமானவை வலிமையின் மூலம் பெறப்பட்ட உரிமையே.

ஒரு இலட்சியமும் இல்லாத மனிதனை விட தன் இலட்சியத்திற்குரிய வழியைக் கண்டுபிடிக்க முடியாதவன்தான், இன்னும் அதிக அற்பத்தனமாகவும் வெட்கம் அற்ற தனமாகவும் உயிர் வாழ்கின்றான்.

— சிந்தனையாளர் நியெட்ஸே

சென்ற இதழ் தொடர்ச்சி

○
○
○

வேட்டைக்கத்தி

"உயிரியல் பேராசிரியர் பூரவும் அவரது உதவியாளர் வோரானவும் ஓராண்டு கால ஆய்வு ஒன்றினை மேற் கொள்ளுவதற்காக பாரெண்ட்ஸ் கடலிலுள்ள கல்கூயெவ் தீவுக்கு சென்ற போது நடைபெற்ற ஓர் உண்மைச் சம்பவமாகும்.

"வோரனவ்" என்ற பேராசிரியர் பூரன் எனும் பேராசிரியரைக் கொலை செய்ததாய் சந்தேகித்து அவரைப் புலனாய்வாளர் விசாரணை செய்த போது பேராசிரியர் வோரனவ் தான் பேராசிரியர் பூரவ்வைக் கொல்லவில்லை என்று கூறித் தான் வாத்துக்களைக் கலைப்பதற்காக ஆற்றின் மறு கரைக்குச் சென்றிருந்த பொழுது இக் கரையில் நின்ற பேராசிரியர் பூரவ்விற்கு அருகாமையில் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அப்போது அங்கே பேராசிரியர் பூரவ் தள்ளாடிய வண்ணம் விழுந்தார் உடனே பேராசிரியர் நின்ற கரைக்கு நான் சென்று பார்த்த போது பேராசிரியர் பூரவ்வின் இடது கண்ணுக்குள்ளே பிடிவரையில் ஒரு வேட்டைக் கத்தி பாய்ந்திருந்தது அவரின் அருகில் அவரது வேட்டைத் துப்பாக்கி கிடந்தது.

"நான் நிலை குலைந்து போனேன். அந்த அப்பாவி மனிதருக்காக என்ன செய்வதென்று தெரியவில்லை; அவரது கண்ணிலிருந்து கத்தியை உருவமுயன்றேன் ஆனால் முடியவில்லை. அது அபாரமான வலுவுடன் உள்ளே செலுத்தப் பட்டிருந்தது. பிறகு ஸ்லெட்ஜை விட்டு வந்த இடத்திற்கு திரும்ப விரைந்தேன். அப்போதுதான் வாஸ்யா பழுது திருத்தி முடித்திருந்தான். பேராசிரியருக்குநேர்ந்த விபத்தைப் பற்றி நான் அவனிடம் சொன்னதுமே, அவன் என்னை ஸ்லெட்ஜில் ஏற்றிக் கொண்டு எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக நாய்களை ஓட்டினான். அந்த இடத்தை நாங்கள் அடைந்தபோது பேராசிரியரின் உயிர்போய் விட்டது. அவரது சடலத்தை முகாமுக்கு எடுத்துச் சென்றோம். அங்கே சிரமத்துடன் கண்ணிலிருந்து கத்தியைப் பிடுங்கி எடுத்தோம். அவ்வளவு தான் .. ... நான் புகைப் பிடிக்கலாமா?"

"தாராளமாக"

வோரனவ் ஒரு சிகரட்டைப் பற்றவைத்து, புகையை ஆவலோடு இழுத்தான். சிறிது நேர மௌனத்திற்குப்பின் மீண்டும் பேசினார்.

"ஆகவே, நான் குற்றம் செய்யவில்லை என வாதிப்பது கடினம் என்பதைக்

காண்கிறீர்கள், அல்லவா? இவ் வழக்கில் ஒவ்வொரு விஷயமும் நான் குற்றவாளி என்றுதான் காட்டுகின்றது என்பதை அறியக் கூடியளவிற்கு நான் போதுமான புத்திசாலி. குற்றம் செய்வதாக ஒப்புக் கொள்வதே ஒரு கால் எனக்கு நன்மையாகலாம். இம் மாதிரி செய்வதைத் தானே, குற்றத்தை ஒப்புக் கொண்டு அதன் பொருட்டு மனமார வருந்துதல் என்றோ வேறு எவ்விதமாகவோ நீங்கள் குறிப்பிடுவது வழக்கம் ......... நான் வழக்குரைஞனன்று, ஆனால் இச் சொற்களை முன்னர் கேட்டிருக்கிறேன். எல்லாம் சரிதான். ஆயினும் நான் இவ்வாறு செய்ய முடியாது. நான் அவரைக் கொல்லவில்லை, கொல்லவேயில்லை... எமது குற்றமின்மையை நிரூபிக்க நான் வகையற்றவனாக இருக்கின்றேன். உங்களிடம் எனக்கு ஓரேயொரு வேண்டுகோள். இக் கடிதங்கள் நான் மணஞ்செய்து கொள்ளவிருக்கும் பெண்ணிடமிருந்து வந்தவை. இது நான் அவளுக்கு எழுதிய கடிதம். நீங்கள் தயவுசெய்து இவற்றை அவளுக்கு அனுப்பி வைப்பீர்களோ?”

“முடியாது நான் அனு



# வேட்டைக்கத்தி

ப்ப மாட்டேன்'' எனப் பதிலளித்தார் புலனாய்வாளர். ''நீங்களே அவளிடம் கொண்டு போய்க் கொடுங்கள் நான் உங்களைக் கைது செய்யப்போவதில்லை, வோரனவ்" என்றார்.

சில வழக்குகளில், எதிர்பாராத தீர்மானம், திடீர் துலக்கம், முடிவான நிர்ணயம் ஆகியவை முறையான துப்புக்கள், சாட்சியங்களது சேர்வையின் விளைவாகவோ, ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டு நிலைநாட்டப்பட்ட விசயங்களின் தர்க்க ரீதியான தொடர்ச்சியாகவோ, எல்லா நிகழ்ச்சிகளின் கூட்டுமொத்தமாகவோ ஏற்படுவதில்லை. ஓரே இருட்டும் கடுஞ்சிக்கலான விட்டுங்களும் விவரங்களும் மனித உறவுகளும், எல்லா விதமான சந்தர்ப்ப சாட்சியங்கள், தற்செயல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் பிரமாண்டமான குவியல்களுமாக சில சமயங்களில் எதிர்ப்பட்டு, மிகப் பலம் வாய்ந்த புலனாய்வாளன் கூட என்ன செய்வதென்று தெரியாமல் திக்கும்முக்காடும்படி செய்து விடும். புலனாய்வானது இயற்கை உணர்வு, திறமை, விடா முயற்சி, புரட்சிகரமான மனச்சான்று, இரக்கம் - சோவியத் நீதித்துறையில் வேலை செய்யும் அதிகாரிக்கேற்ற மனிதாபிமானம் ஆகியனவையே இத்தகைய நேரங்களில் வழிகாட்டி நடத்திச் சென்று; முடிவில் அவன் உண்மையைக் கண்டுகொள்வதற்கு துணை செய்கின்றன.

வோரனவை விடுதலை செய்வதன் வாயிலாகப் புலனாய்வாளர் தம்மை இக்கட்டான நிலமைக்கு ஆளாக்கிக் கொண்டார். ஒருபுறம், வோரனவின் குற்றம் மறுக்க முடியாதது போலக் காணப்பட்டது. அது வழக்கின் சாட்சியத்திலிருந்து தர்க்கரீதியாக வெளிப்படுவது போலிருந்தது. சாத்தியமான நிகழ்ச்சி விபரம் அது ஒன்றே என்று தோன்றியது தவிர இதுவே ஆதார பூர்வமாக நிகழ்ச்சி விவரமாகவுமிருந்தது. வழக்கைப்பற்றி அறிந்தவர்களும், வழக்கில் சட்டரீதியான அக்கறை கொண்டவர்களுமான சமுதாய வட்டாரத்தினர் இந்த விபரத்தையே சரி என்று ஒப்புக் கொண்டிருந்தனர்.

மற்றொருபுறம் வோரனவ் விடுதலை செய்யப்பட்டது. புலனாய்வாளரின் உள்ளார்ந்த நம்பிக்கை ஆதாரத்திலேயே, அவர் வோரவை நம்பினார். வோரனவின் கூற்றுக்கு எதிரான சாட்சியங்களும், அவர் குற்றவாளி என உறுதிப்படுத்தும் சந்தர்ப்பங்களும் நிகழ்ச்சிகளும் இருந்தபோதும் அவர் வோரனவை நம்பினார். அவரது நம்பிக்கைக்கு அடிப்படை, உள்ளத்தின் உள்ளே உருவாகும் மங்கலான, தெளிவற்ற துலக்கமற்ற ஆதாரங்கள் மட்டுமே. இந்த ஆதாரங்கள் பார்வைக்கு தர்க்கப் பொருத்தமாகத்தென்படமாட்டா. இவற்றை சொற்களில் வெளிப்படுத்துவது கடினம். இவை ஒரு போதும் குறிப்பிடப்படுவதுமில்லை. புலனாய்வாளரின் திறமை, உளவியல் வகையிலும், தொழில் ரீதியாகவும் உள்ள அவனது உள்நோக்கு அவனது இயற்கை உணர்வின் தீவிரம்-இவற்றின் பயனாகவே இந்த ஆதாரங்கள் உருவாகின்றன. பல ஆண்டுகள் சிந்தனை மிகுதியும் சலிப்பின்மையும் வாய்ந்த உழைப்பு, ஆழ்ந்து நோக்குவதில் பயிற்சி, துப்பறிவதில் அனுபவம்' நிகழ்ச்சிகளையும் மனித இயல்புகளையும் பகுத்தாராயும் இடைவிடாப் பழக்கம்ஆகியவற்றின் விளைவே இந்த ஆதாரங்கள்.

வோரனவ், பேராசிரியரைக் கொலை செய்யவில்லை என்று புலனாய்வாளர் உறுதியாக நம்பினார். ஆனால் இந்த நம்பிக்கைக்கு ஆதாரம்காட்டி அதை மெய்ப்பிக்க வேண்டியிருந்தது. அதை விட முக்கியமானது பேராசிரியர் பூரவின் மரணத்தின் புதிரை விடுவிக்க வேண்டியது.

ஏனெனில் வேரனவ் முற்றிலும் குற்றமற்றவன் என நிர்ணயிப்பதற்குப் புலனாய்வாளரின் நம்பிக்கை மட்டிலும், அது எவ்வளவு தான் பலமாக இருந்தாலும் கூடப் போதாது.

பேராசிரியர் பூரவின் பிரேதப் பரிசோதனையை நடத்தியவர் ஸெமியோனவ்ஸ்கி. வழக்கமான திறமையுடனும் நுட்பத்துடனும் அதை முடித்த பிறகு தமது முடிவுகளைத் தெரிவித்தார். அதில் இரண்டு முக்கிய விஷயங்கள் இருந்தன.

01. பேராசிரியர் பூரவின் மரணம், இடக் கண்ணுக்குள் வேட்டைக்கத்தி பாய்ந்த அடியால் உண்டான பெரிய காயத்தின் விளைவாகச் சம்பவித்தது.

02. மனித சக்திக்கு மேற்பட்ட வலுவோடு அந்த அடி கொடுக்கப்பட்டிருந்தது.

''மனித சக்திக்கு மேற்பட்ட வலு'' என்பதன் பொருள் என்ன? என்று புலனாய்வாளர் கேட்டார். ''இதை எவ்வாறு புரிந்து கொள்வது?'' ''அதன் பொருளாவது... என நிபுணர் விடையளித்தார். ''எத்தகைய வலுவுடன் அந்த அடி கொடுக்கப்பட்டதோ, அது சாதாரண மனிதனின் சராசரி பலத்தையும் விடக் கூடுதலானது. அதனால் தான் மனித சக்திக்கு மேற்ப, ட்ட' என்ற சொற்களை உபயோகித்துள்ளேன். எனினும் அச்சக்தி துல்லியமாக எத்தகையது என்பதை என்னால் கூற......''

புலனாய்வாளர் தனது வேலையைத் தொடர்ந்து நடத்தினார். பேராசிரியரின் துப்பாக்கியைப் பரிசோதித்தார். அது ஒரு 'வீன்செஸ்டர்' துப்பாக்கி. வழக்கிற்கு உபயோகமாக எதுவும் அதிலிருந்து கிடைக்கவில்லை. எந்தக் கத்தியினால் மரணம் விளைந்ததோ அதுவும் மிகச் சாதாரணமானது தான். மரப்பிடியுடைய மலிவான வேட்டைக் கத்தி.

ஆனால் கத்தியை மிக நுணுக்கமாகச் சோதித்து அதைச் செய்த தொழிலாளியின் கவனக்குறைவால் கைப்பிடியில் ஏற்பட்டிருந்த ஒரு சிறிய குறையைக்கண்டு பிடித்தார். கத்தி அலகுடன் மரப்பிடியை இணைத்திருந்த உலோகக் கம்பியின் சிறு கூர் நுனி சட்டெனப் பார்வைக்குத் தெரியவில்லை என்றாலும், பிடிக்கு வெளியே துருத்திக் கொண்டிருந்தது.

புலனாய்வாளர் தனது விரலால் அச் சிறிய உலோக முனையை வருடிப் பார்த்ததும், திடீரெனத் துள்ளிக்குதித்தார். காரிருள் தீப்பொறி போல அவரது மனதில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு அவசரமாக அழைக்கப்பட்ட நிபுணர்கள், துப்பாக்கி செய்வோர், வேட்டைக் காரர்கள்- புலனாய்வாளரின் அலுவலகத்தில் கூடினர்.

"சொல்லுங்கள் எனக்கு" வேட்டைக்காரர்களிடம் பேச்சைத் தொடங்கினார் புலனாய்வாளர். மரப்பிடி வைத்த வேட்டைக் கத்தியை இடைவாரில் செருகிக்கொண்டிருக்கும் ஒரு வேட்டைக்காரனின் தோட்டா, எப்படியோ சிக்கிக்கொண்டதென வைத்துக் கொள்வோம். தனது தோட்டா முன்னே போகாமல் ரவைக் குளாய் நமத்துப் போய் பருத்தோ, நெளிசல் கண்டோ இருந்தால் அல்லது மட்டகரமானதாக இருந்தால், தோட்டா செருகிக்கொள்ளும் அல்லவா? அப்போது வேட்டைக் காரன் என்ன செய்திருப்பான்?

நிபுணர்கள் ஒருவரையொருவர் வியப்புடன் பார்த்தவாறு தங்களுக்குள் கிசு கிசுக்கத் தொடங்கினார்கள்.

கடைசியில் அவர்கள் ஒருமித்த முடிவிற்கு வரவும் ''இவ்வாறு நேர்ந்தால், அந்த வேட்டைக்காரன் தனது வேட்டைக் கத்தியை எடுத்து தோட்டாவின் குழல் பகுதியை கவனமாக மெல்லத் தட்டி, தோட்டாவை உள்ளே செலுத்தப் பார்த்திருப்பான்'' என்றார்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன்'' எனக் கூறி முறுவலித்தார் புலனாய்வாளர். ''நல்லது, இப்போது இந்தக் கத்தியைப் பாருங்கள். தயது செய்து மரக்கட்டைக்கு வெளியே துருத்திக்கொண்டிருக்கும் சிறிய உலோக முனையையும் கவனியுங்கள். இப்போது, இந்தக் கத்தியால் தோட்டாவை உள்ளே செலுத்த ஒரு வேட்டைக் காரன் முயன்றால் என்ன நேருமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

கத்தியையும், உறுதியான உலோக முனையையும் நன்கு உற்றுப் பார்த்த நிபுணர்கள், ஒருமித்த முடிவுக்கு வந்தனர்.

"இந்தக் கம்பி கூர்மையாயும் வலுவாயும் இருப்பதனால், சுடுமுள்ளின் வேலையைச் செய்து விடும். தோட்டாவின் குழல் பகு

தியை இந்தக் கத்திப் பிடியால் தட்டினால் அது துப்பாக்கியை வெடிக்க வைத்துவிடும்'' என்றார்.

பின்னர் புலனாய்வாளர், துப்பாக்கி செய்பவர்கள் பக்கம் திரும்பி ''தோட்டாரவைக் குழாய்க்குள் முழுவதும் செல்லவில்லை என்றும், வேட்டைக்காரனின் கவனக் குறைவால் துப்பாக்கி வெடித்து விட்டதென்றும் வைத்துக் கொள்வோம். அப்போது வெடி அதிர்ச்சியில் முழு வேகமும் எப் பக்கத்தில் தாக்கும்? அந்த வேகத்தில் வன்மை எவ்வளவு இருக்கும்? சொல்லுங்கள் என்றார்.

''வெடி அதிர்ச்சியின் வேகம் பின்புறமாகத் தாக்கி, கத்தியைப் பிடித்திருக்கும் கையை உடனடியாக முகத்தின் மேல் சாடிவிடும். வெடியின் வன்மை மிக அதிகமாக, ஐந்து முதல் ஏழு வரை வழிமண்டல அமுக்கத்திற்குச் சமமாக இருக்கும்...,

புலனாய்வாளர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார். அவர் மனதில் உதித்த எண்ணம் சரியாகி விட்டது.

அந்நேரத்தில் ஸெமியோனவ்ஸ்கி அலுவலகத்துள் நுழைய, புலனாய்வாளர் கத்தியை அவரிடமும் காட்டி நிபுணர்களின் கருத்தை திரும்பவும் சொன்னார்.

''இதெல்லாம் மிகவும் மிகவும் சாமர்த்தியமாக நம்பக் கூடியதாகவும் இருக்கின்றது. உண்மைதான்.'' என்று மெதுவாகச் சொல்லத் தொடங்கினார், ஸெமியோனவ்ஸ்கி. ஒரு சிறிய விபரம் மட்டும் விலக்காக இல்லாதிருப்பின், அதை முற்றிலும் உண்மை என்றே நம்பலாம். பேராசிரியர் தனது இடக் கண்ணில் பட்ட அடியால் இறந்து போனார். நீங்கள் சொல்வது போல நடந்திருந்தால், தனது வலக்கையால் அவர் தனது வலக் கண்ணைத் தான் காயப்படுத்திக் கொண்டிருக்கலாமே தவிர இடக் கண்ணைக் காயப்படுத்திக் கொண்டிருக்கவே முடியாது.''

அப்போதே அதே இடத்தில் பேராசிரியரின் கை நீளம், உயரம், வெவ்வேறு அங்கங்களுக்கிடையே உள்ள அளவுப்பொருத்தம் ஆகியவற்றைக் கணக்கிட்டு வெடி அதிர்ச்சியால் அத்தகைய தாக்குதல் நேர்ந்திருக்குமாயின் பேராசிரியரின் வலக்கை, வலக் கண்ணைத்தான் காயப்படுத்தியிருக்குமே தவிர, இடக் கண்ணை ஒரு போதும் காயப்படுத்தியிருக்க முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

புலனாய்வாளருக்கு மிகத் தெளிவாகவும், சரியாகவும் காணப்பட்ட கூற்று தவிடு பொடியாகத் தொடங்கியது.

ஆனால் அவரோ விடாப்பிடியான மனிதர். தமக்குப் புலப்பட்ட எண்ணம் சரியே என உறுதியுடன் நம்பிய அவர், தமது ஆய்வைத் தொடர்ந்து மேற்கொண்டார்.

''பேராசிரியர் உடல் நலம் வாய்ந்தவர் தானே? என இறந்தவரின் உறவினரைக் கேட்டார்.

''ஆமாம் உடலாலும், உள்ளத்தாலும் நலமாகவே இருந்தார்'' என அவர்கள் பதிலளித்தனர்.

''அவரிடம் தனிப்பட்ட விசேடம் ஏதேனும் இருந்ததா? அவர் உடலில் ஏதாவது குறைபாடுகள் உண்டா?"

''கிடையாது, தனிப்பட்ட விசேடமோ, உடலின் குறைபாடோ எதுவுமே அவரிடம் இல்லை.''

''அவர் அறுவை மருத்துவரின் கத்தியை எப்போதாவது உபயோகித்தது உண்டா?'' எனத் தொடர்ந்து வினாவினார்.

''ஆமாம் அவர் அடிக்கடி வீட்டில் அத்தகைய கத்தியால் வேலை செய்வதுண்டு''

''எந்தக் கையால் அவர் கத்தியைப் பிடித்துக்கொள்வார்''? என்று புலனாய்வாளர், தனது கடைசி நம்பிக்கையும் வீணாகி விடக்கூடாதே என்ற பயத்தால் நடுங்கிக்கொண்டே கேட்டார்.

'' ஏன், பேராசிரியர் இடக்கைப் பழக்கமுள்ளவர்'' என்று அமைதியான பதில் கிடைத்தது.

மகிழ்ச்சி மிகுதியால் கூச்சலிடாமல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்வது

புலனாய்வாளருக்குப் பெரும் பாடாகி விட்டது இறுதியாக ஒன்று மட்டும் உண்மை, தீர்வு, தெளிவு, விளக்கம் எல்லாம் ஒருங்கே கிடைத்து விட்டன. அவர் இடக்கைப் பழக்கமுள்ளவரா! புலனாய்வாளர் ஸெமியோனவ்ஸ்கியைப் பார்க்க விரைந்தோடினார். மீண்டும் ஒரு முறை ஸெமியோனவ்ஸ்கி உட்கார்ந்து கணக்கிட்டுப் பார்த்ததில் பேராசிரியர் இடக்கையால் தோட்டாவை உட்செலுத்த முயன்றிருந்து அது வெடித்திருந்தால், அவர் தனது இடக்கண்ணைத் தவிர வேறெங்கும் காயப்படுத்திக் கொண்டிருக்க முடியாது என்பது திட்டவட்டமாகத் தெரிய வந்தது.

வெடி அதிர்ச்சியின் வேகத்தால் பேராசிரியரின் இடக்கை அவர் முகத்தின் மீதும், இடக்கண்ணின் மீதும் எப்படிச் சாடப்பட்டது என்பதை விளக்கிக் காட்டும் நிழற்படச் சுருள் ஒன்றை ஸெமியோனவ்ஸ்கியும் புலனாய்வாளரும் பிறகு தயாரித்தனர்.

கடைசியில் எல்லாம் தெளிவாகி விட்டது போலத் தெரிந்தது. உண்மை துலக்கப்பட்டு விட்டது. பேராசிரியர் பூரவின் மரணம் விளக்கப்பட்டு விட்டது. வோரனவின் குற்றமின்மை நிரூபிக்கப்பட்டு விட்டது. இத்தகு நிலையில், இவ் வழக்கில் குற்றத்தை உறுதிப்படுத்துவதற்குரிய சாட்சியமில்லை என்ற காரணத்தைக் காட்டி, வழக்கைத் தள்ளுபடி செய்து விடலாம். வழக்கு விபரங்களை ஆவணக் காப்பகத்திற்குள் வைத்து விடலாம். புலனாய்வாளர் அடுத்து மேற்கொள்ள வேண்டிய வழக்குகளை விசாரிக்கத் தொடங்கலாம். சிக்கலான மாய வழி போன்ற விசயங்களிலும் மனித உறவுகளிலும் தட்டுத் தடுமாறுவதும், அவ்வப்போது இடறி விழுந்த போதிலும் மென்மேலும் செல்வதும் தவறுகள் செய்வதுடன் கூடப் புதிய உண்மைகளைக் கண்டு பிடிப்பதுமாக அவர் மீண்டும் கும்மிருட்டில் சுற்றியலைந்திருக்கலாம்.

ஆமாம், இவ்வாறெல்லாம் செய்திருக்கலாம் தான்.... ஆனால் அந்தச் சமயம் பிடித்த கத்தி எங்கிருந்து வந்தது?

வழக்கின் விபரத்தை அறிந்த பேராசிரியரின் சகோதரர் குறிப்பிட்டார். ''நீங்கள் சொல்வது சரியென்றும் எனது சகோதரர் தனது சொந்தக் கவனக் குறைவால் மரணமடைந்தார் என்றும் நான் ஒப்புக்கொள்ளத் தயார். ஆனால் அந்தக் கத்தி எங்கிருந்து வந்தது? அவரிடம் அம்மாதிரிக் கத்தியே இருந்ததில்லை என நான் உறுதியாகச் சொல்வேன். ஆய்வுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட பொருள்களில் அம் மாதிரியான கத்தியே கிடையாது இது எனக்கு நன்கு தெரியும். அது யாருடைய கத்தி? யாருடையது?'' இக்கேள்விக்கு நீங்கள் விடை கூறும்வரை வழக்கு முடிந்து விட்டதாக நான் கருதமுடியாது.

ஒரு வகையில் பேராசிரியர் பூரவின் சகோதரர் சொல்லியது சரியே, அவர் கேட்ட கேள்விக்குப் பதில் தர வேண்டியது அவசியமாயிருந்தது.

பேராசிரியர் அந்தக் கத்தியை எங்கிருந்து பெற்றார் என்பது வோரனவுக்குத் தெரியவில்லை.

அது பேராசிரியர் பூரவின் கத்தி என்றுதான் நான் நினைக்கிறேன். அவர் அக் கத்தியை அடிக்கடி உபயோகித்து வந்ததை நான் பார்த்திருக்கிறேன் என்றார்.

அப்பொழுது புலனாய்வாளர் ஆய்வுக்காக உடனெடுத்துச் செல்லப்பட்ட பொருள்களின் பட்டியலைப் படித்துப் பார்த்தார் அறிக்கைகள், ரசீதுகள், பட்டியல்கள், பில்கள ஆகியனவற்றின் பெருங்குவியல் குண்டுகள், துப்பாக்கிகள், கூடாரங்கள், டப்பியிடப்பட்ட பொருள்கள், பைனாக்குலர்கள், சமையல் பாத்திரங்கள், தெர்மாஸ் புட்டிகள், கோடரிகள், போர்க்குகள், சிறு குறடுகள், சம்மட்டிகள், உலோகக் குவளைகள். மண்ணெண்ணெய் அடுப்புகள், வெப்பமானிகள், பீங்கான் பாத்திரங்கள், இன்னும் எத்தனையோ வகையான பொருள்களின் பெயர்கள் காணப்பட்டனவே தவிர, ''வேட்டைக் கத்தி - 4 ரூபிள் என்ற குறிப்பு, புலனாய்வாளர்

PUBLIC LIBRARY
JAFFNA
NALLUR BRANCH LIBRARY



துருவித் துருவித் தேடியும் கிடைக்கவில்லை.

அந்த ஆய்வுக் குழு அர்கேஞ்சல்ஸ் நகரத்தில் தங்கிவிட்டு பிறகுதான் பாரண்ஸ் கடலுக்குப் புறப்பட்டுச் சென்றது என்ற விஷயம், புலனாய்வாளரின் நினைவுக்கு வந்தது. அரச வழக்குரைஞரிடம் சென்று ஒரு நாள் தம்மை அர்கேஞ்சல்ஸிற்கு அனுப்பி வைக்குயாறு கேட்டுக் கொண்டார்.

" எதற்காக? " என்றார் அவர்.

" கத்திக்காக " என்று புன்[illegible]கையுடன் பதிலளித்தார் புலனாய்வாளர். மறுநாள் காலையில் அவர் அர்கேஞ்சல்சை அடைந்ததும் நேராகக் கடைகளுக்குச் சென்றார். விலையுயர்ந்தவையும், மலிவானவையுமான பல இடங்களில் தயாரிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வேட்டைக் கத்திகள் அவருக்குக் காட்டப்பட்டன. ஆனால் எம் மாதிரிக் கத்தியை அவர் தேடி வந்தாரோ? அதைத்தான் காணவில்லை. விற்பனையாளர், சந்தடி செய்யும் இந்த வாடிக்கையாளரைப் பார்த்து மலைத்துப் போய் விட்டனர். கடை மேலாளர்கள் தோள்களைக் குலுக்கினர். காசாளப் பெண்கள் இகழ்ச்சி தோன்ற இளித்தனர். ஆனால் ஒரு கடையிலாவது புலனாய்வாளர் தேடி வந்த கத்தியைப் போன்று காணோம்.

[illegible]ல்லாமோ சுற்றியலைந்து வி[illegible] புலனாய்வாளர் மாலை நேரத்தில் தவினா கரையிலிருந்து சிறு கடை ஒன்றிற்குள் நுழைந்தார். அது வேட்டை, விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யும் கடை. அங்கு வந்ததுமே முதலில் அவர் கண்ணில் பட்டது, மரப்பிடியுடைய வேட்டைக் கத்திதான். பேராசிரியரின் மரணத்திற்குக் காரணமாயிருந்த கத்தியின் அச்சு.

" இந்தக் கத்தி விலை என்ன?" என்று புலனாய்வாளர் பதற்றத்துடன் கேட்டார்.

" மூன்று ரூபிள் எழுபத்தைந்து கோபெக் " என்று விற்பனையாளன் பதிலளித்தான்.

புலனாய்வாளர் கடை மேலாளரை அழைத்து விசாரித்தார். ஒரே கூட்டுறவு நிலையம்தான் அத்தகைய கத்திகளைத் தயாரிக்கிறது என்றும், தயாராகும் கத்திகளை எல்லாம் அந்தக் கடை ஒன்றுக்குத்தான் அனுப்பி வருகிறது என்றும் தெரிந்து கொண்டார். ஆய்வுக்கு அர்கேஞ்சல்ஸ்கில் தங்கியிருந்த காலத்திலும் இக்கத்திகள் விற்பனையாகியிருந்தன என்றும் தெரிய வந்தது.

" ஏராளமான கத்திகளை நாங்கள் விற்பனை செய்துள்ளோம் ஆனால் வாங்கியவர்கள் அத்தனை பேரையும் நாங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டுமா ? " என்றார் மேலாளர்.

புலனாய்வாளர் மாஸ்கோ திரும்பினார். பேராசிரியர் பூரவின் குறிப்புப் புத்தகத்தில் நூற்றுக்கணக்கான குறிப்புக்களுக்கிடையே ' அர்கேஞ்சல்ஸ்க் வேட்டைக்கத்தி - ரூ, 3 கோ 75 ' என்ற குறிப்பைக் கண்டு பிடித்தார்.

"தோழர் வோரன்ஸ், அமருங்கள். இதுவே கடைசி முறையாக நான் உங்களை அழைப்பது. வழக்கை முடிப்பதற்குரிய உத்தரவை தயவு செய்து படியுங்கள். ஒரு நகலைப் பெற்ற நீர் கையெழுத்திடுங்கள். இதோ இங்கே .." என்று உணர்ச்சியின்றிக் கூறினார், புலனாய்வாளர்.

வோரன்ஸ் பேனாவை எடுத்தார். திடீரென்று எல்லாம்- பேனா, மைக்கூடு, மேசையின் மறுபுறம் அமர்ந்துள்ள புலனாய்வாளரின் முகம் ஆகியவை எல்லாமே – சுழல்வது போல அவருக்குத் தோன்றியது......

புலனாய்வாளரின் சொற்கள், முடிவில் அவர் உணர்வில் பதிந்தன. இந்தப் பயங்கர அனுபவம் இப்போது பழங்கதையாகி விட்டது. தான் நிரபராதி என்பது மெய்ப்பிக்கப்பட்டு, உறுதியாகி விட்டது; உண்மை கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்று புரிந்து கொண்டார். அத்துடன் எதிரே அமர்ந்திருக்கும் வறண்ட மனிதரே, தனது உயிரையும் தன்மானத்தையும் காப்பாற்றினார் என்பதையும் புரிந்து கொண்டார்.

[லெப் ஷெய்னின் எழுதிய புலனாய்வாளரின் குறிப்புக்கள் என்ற புத்தகத்தில் இருந்து ]

— இரா. இளையரசன் —

★ முற்றும்

மாணவர்களுக்கான

* அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய பாடசாலை உபகரணங்களும்
* அலுவலகங்களுக்கான காகிதாதிகளும் உபகரணங்களும்
* பதிப்பகங்களுக்குத் தேவையான காகிதாதிகள், அச்சக மை வகைக

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

புஸ்பா அன் கோ





பல் பொருள் வாணிபம்

293 - மானிப்பாய் வீதி,

யாழ்ப்பாணம்.